பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 18 ஞாயிற்றுக்கிழமை (04.11.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 338

# அமைதிப் புறாவின் கோரக் கொலை

# இலட்சிய உறுதிக்கு உரமாகியுள்ளது!



## தமிழ்ச்செல்வனின் இழப்புக் குறித்து பிரபா

கிளிநொச்சி,நவம்பர் 4

★ தமிழுலகமே ஆழமாக நேசித்த ஓர் அரசியல் தலைவனைச் சிங்கள தேசம் சாகடித்திருக்கிறது.

★ சமாதானத் தூது அனுப்புவதற்குப் மாறாக எமது அமைதிப் புறாவைக் கொடூரமாக, கோரமாகக் கொன்றொழித்திருக்கிறது.

★ அவர்கள் கோரக் கொலை செய்த தமிழ்ச்செல்வன் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டியிருக்கின்றான். எங்கள் இலட்சிய உறுதிக்கு உரமேற்றி இருக்கின்றான்.

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கொலைக்கு இரங்கல் தெரிவித்து நேற்று வெளியிட்ட அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரன் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது-

சமாதான வழியில் நீதியான முறையிலே எமது மக்களது தேசியப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணுமாறு அனைத்துலகம் அடுத்தடுத்து அழைப்பு விடுத்தபோதும் சிங்கள தேசத்திலிருந்து நல்லெண்ணம் வெளிப்படவில்லை. பௌத்தத்தின் காருண்யத்தைக் காண முடியவில்லை. சிங்கள தேசம் தனது இதயக் கதவுகளைத் திறந்து சமாதானத் தூதும் அனுப்பவில்லை. மாறாக போர்க்கழுகுகளை ஏவி, இராட்சதக் குண்டுகளை வீசியிருக்கின்றது. எமது அமைதிப் புறாவைக் கொடூரமாக, கோரமாகக் கொன்றொழித்திருக்கிறது.

தமிழுலகமே ஆழமாக நேசித்த ஓர் அரசியல் தலைவனைச் சிங்கள தேசம் இன்று சாகடித்திருக்கின்றது. தமிழீழ மக்களின் மனங்களை வென்ற ஒரு தன்னிகரற்ற தலைவனைச் சிங்களம் பலிகொண்டிருக்கின்றது. எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனையும் ஏனைய ஐந்து போராளிகளையும் இழந்து இன்று தமிழீழ தேசம் வரலாற்றில் என்றுமில்லாத ஒரு பேரிழப்பைச் சந்தித்திருக்கிறது. இந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழி மகிந்தபுரமாகிறது

கொழும்பு,நவ.4

நாவற்குழி அரச வீடமைபுத் திட்டத்துக்கு 'மகிந்தபுரம்' என பெயரிடுவது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இந்த முடிவைக் கண்டித்து தமிழர் விடுதலைக்கூட்டணின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கபட்டிருப்பதாவது:-

இது ஏற்றுக்கொள்ளமுடியாத விடயம். பொருத்தமற்ற காலப்பகுதியில் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தின் மூலம் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இந்த தீர்மானத்தின் மூலம் நாவற்குழிக் கிராமம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனின் படுகொலைக்கு ஆச்சரியப்படும் விதத்தில் பதிலடி!

### இளந்திரையன் சொல்கிறார்

கிளிநொச்சி, நவ.4

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலைக்கு தக்க பதிலடி கொடுப்போம். அது ஆச்சரியப்படும் வகையில் அமையும்.

விடுதலைப் புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் இப்படி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்திருப்பவை வருமாறு-

பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டதற்கு நாங்கள் கொடுக்கும் பதிலடியை சொல்லில் கூறப்போவதில்லை. மாறாக செயலில் காண்பிப்போம். இத்தாக்குதல் எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் இருக்கும்.

சிலகாலமாக இருந்த சமாதான பேச்சுக்கான வாய்ப்புப் பாதை ஒன்று படையினரின் தாக்குதல் மூலம் மூடப்பட்டுவிட்டது - என்றார்.

(அ-1-சி)

## அரசாங்கத்தின் விமானத்தாக்குதல் அமைதி முயற்சிக்கு விழுந்த அடி!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்



கிளிநொச்சி, நவ.4

அமைதி முயற்சிகளின் சின்னமான இடத்தின் மீதுதான் சிறிலங்கா அரச பயங்கரவாதிகளின் வான் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் அமைதி முயற்சிகளுக்கு விழுந்த அடியாகும்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் ஐந்து மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இப்படித் தெரிவித்தார்

அரசியல்துறைப் பொறுப்பாளர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது.:-

எமது விடுதலைப் போராட்டத்தில் நேற்றைய(வெள்ளி) (12ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிலைமைகளின் விளைவுகள் குறித்து சொல்ஹெய்ம் கவலை



ஒஸ்லோ,நவ.4

இலங்கையின் தற்போதைய போர்நிலைமைகளின் விளைவுகள் தொடர்பாக ஆழ்ந்த கவலை கொள்வதாக அமைச்சரும் முன்னர் சமாதானத் தூதுவருமான எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்

பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் படுகொலைகுறித்துத் கருத் துக் கூறிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைதி முயற்சிகளில் நாம் அனுசரணையாளராக செயற்பட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே அரசாங்கத்துக்கும் இடையேயான முக்கிய தொடர்பு மையமாக தமிழ்ச்செல்வன் விளங்கினார். இலங்கையின் தற்போதைய போர் நிலைமைகளின் விளைவு தொடர்பாக ஆழ்ந்த கவலை கொள்கிறோம் - என்றார்.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கு முன்னர் பொறுப்பாக இருந்த சிறப்புத் தூதுவர் விடர் ஹெல்கிஸன் கருத்துத் தெரிவிக்கையில் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனின் கொலைக்குப் பின்னரான நிலைமை குறித்து இந்திய உயர்மட்டம் ஆராய்வு

புதுடில்லி, நவ.4

விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் இலங்கை விமானப் படையினர் நிகழ்த்திய குண்டுவீச்சில் கொல்லப்பட்டதன் விளைவாக, அதன் பின்னர் இலங்கையில் உருவாகியுள்ள பதற்ற நிலைமை குறித்து புதுடில்லி அரச உயர் வட்டாரங்களில் நேற்று ஆராயப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று கலந்தாலோசனை நடத்தியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவித்தன.

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் கொலை செய்யப்பட்டதால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைமை தொடர்பாக தமிழக முதல்வர் மு.கருணாநிதி பிரணாப் முகர்ஜியிடம் எடுத்து கூறினார் என்றும் -

அதன் பின்னரே வெளியுறவு அமைச்சர் முகர்ஜி இது விடயமாக பிரதமருடன் ஆராய்ந்தார் என்றும் - தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை அரசைக் கண்டிக்கும் வகையில் இந்திய அரசு காட்டமான அறிக்கை ஒன்றை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ-1)

## சமாதானத்தை இலக்கு வைத்து அரசு அழித்துள்ளது விளைவுகளுக்கு அதுவே பொறுப்பு ஏற்கவேண்டும்

### தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,நவ.4

சிங்கள அரசாங்கம் இலக்குவைத்து அழித்தது வெறும் தமிழ்ச்செல்வனை மாத்திரம் அல்ல. அது சமாதான முன்னெடுப்புக்களையும் பேச்சுவார்தைகளையும் இலக்கு வைத்து அழித்துள்ளது. இதனைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

இதன் விளைவுகளாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அழிவுகளுக்கும் இலங்கை அரசே பொறுப்பேற்கவேண்டும் - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கொலையைக் கண்டித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியன நேற்றுக் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டன. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான சு.ப.தமிழ்ச்செல்வன்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் உள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக ஆள்கள் தேவை

1) களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper)
2) ரலி கிளாக் (Tally Cleark)

கல்வித்தகைமை மற்றும் முன் அனுபவம் கொண்ட சுயவிவரக் கோவையுடன் எதிர்வரும் 10.11.2007, 12.11.2007 ஆகிய தினங்களில் நேரில் சமுகம் தரவும்.

**304(110), ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 2225896**

(67603)


இந்துமத குரு பீடாதிபதியின் ஆசியுடன் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின்

## மாதாந்தக் கருத்தரங்கு

| | |
|---|---|
| காலம் | : இன்று (04.11.2007) ஞாயிறு பிற்பகல் 1.30 மணி |
| இடம் | : தலைமைச் செயலகம், ஆனைப்பந்தி |
| தலைவர் | : சிவஸ்ரீ ப.மனோகரசிவாச்சாரியார் |
| ஆசியுரை | : சிவஸ்ரீ சோமாஸ்கந்த சிவாச்சாரியார் |
| சிறப்புரை | : நல்லை ஆதீன 2 ஆவது குரு மகா சந்நிதானம் |
| கருத்துரை | : சிவஸ்ரீ மு.ரவிபாஸ்கரக் குருக்கள் |
| விடயம் | : ரக்சோக்ண மூர்த்தி திசா ஹோமங்கள் |
| கௌரவிப்பு | : 80 அகவையைப் பூர்த்தி செய்த அந்தண சிரேஸ்டர்களையும் குருகுல ஆசிரியர்களையும். |

இன்று கௌரவிப்பு பெறுகின்ற விப்பிர சிரேஷ்ட அந்தணப் பெரியோர்கள் பாதம் பணிந்து நல் ஆசிகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்

01) மகாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள் - மாவிட்டபுரம்
02) வை.மு.பரமசாமிக்குருக்கள் - கோப்பாய்
03) இ.சுப்பிரமணியக்குருக்கள் - அரியாலை
04) நா.யோகீஸ்வரக்குருக்கள் - அத்தியடி
05) ந.நகுலீஸ்வரக்குருக்கள் - கீரிமலை
06) சபா. தேவராஜக் குருக்கள் - மாலிசந்தி
07) ச.சோமஸ்கந்தக் குருக்கள் - மயிலணி
08) சு.சிவசாமிசர்மா - கந்தர்மடம்
09) இ.சர்வேஸ்வரஐயா - நீராவியடி(வயலின்)
10) வி. ஜெகதீஸ்வரசர்மா - ஆனைக்கோட்டை
11) வா.சர்வேஸ்வரசர்மா
12) வா.சுப்பிரமணியக் குருக்கள் - சங்குவேலி
13) மு.ஞானசர்மா - மட்டுவில்
14) தா.மகாதேவக்குருக்கள் - இணுவில் (ஆசிரியர்)
15) ப.ராஜா கோபாலசர்மா - நல்லூர் (ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (67606) சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்.

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் அல்பிரட் ஸாள்ஸ்

(ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவன்)

மலர்வு 21.04.1990 — உதிர்வு 05.11.2006



சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (05.11.2007) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (67604)

நெஞ்சம் நெகிழ்ந்துருகும்
அல்பிரட் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் திட்ட ஆலோசகர்
ப.தர்மலிங்கம் அவர்களின் சகோதரர்

### பரமு முத்துக்குமாரசாமி

31.10.2007 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திக்கின்றோம்.

**தியாகி அறக்கொடை நிறுவனம்,**
**நிர்வாகிகளும், பணியாளர்களும்.**
527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## விற்பனைக்கு

கடைக்குரிய சுவர் அலுமாரி, அரை அலுமாரி அலுமினியத்தால் ஆனவை உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0779912302
64, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## தவறிவிட்டது

ஜெயரட்ணம் ஜெயகாந் என்பவருடைய தே.அ.அ.இல. (793234945V), விசேட அ.அ. மண்டைதீவு கடற்படை அ.அட்டை என்பன யாழ். சீனிவாசகம் வீதிக்கும் பிறவுண் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பிள்ளையார் அப்பள கம்பனி, 148, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.


## இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட், சேவல் என்பன விற்பனைக்குண்டு.

1. NEW R.S.K. FARM, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K. FARM, K.K.S. றோட், சுன்னாகம், கொமர்ஷல் பாங் அருகில்.

SALES SALES SALES

### தீபாவளி அதிரடி மலிவு விற்பனை
03.11.2007 தொடக்கம் 08.11.2007 வரை

ORIGINAL SOFTWARE, GAME CD - 75/=
ORIGINAL ACD 50/=முதல் 100/= வரை
ORIGINAL VCD MOVE - 75/=

ஏனைய அனைத்து வகையான DVD, VCD, MP3 இந்து, கிறிஸ்தவ பக்தி CDக்கள், கர்நாடக சங்கீத CDக்கள் என்பன விற்பனைக்கு உண்டு. இவை அனைத்துக்கும் 10 வீதம் முதல் 50 வீதம் வரை விலைக் கழிவு வழங்கப்படும். இச் சலுகை தீபாவளி தினம் வரை மட்டுமே.

**MUSIC WORLD**
141B, தபால்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.

SALES SALES SALES SALES SALES SALES SALES SALES SALES


## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் கார்த்திகேசு

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கார்த்திகேசு நேற்று (03.11.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தனலட்சுமியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (நடத்துநர், இலங்கைப் போக்குவரத்துசபை கோண்டாவில்), கேசவநாதன், புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் ராஜேஸ்வரனின்(ஜேர்மனி) மாமனும் சச்சினின் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா(ஓய்வுபெற்ற ஆசிரியர்), சுப்பிரமணியம் மற்றும் நல்லதம்பி (மருத்துவர்) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கேதீஸ்வரன் (மகன்)

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுப்பிரமணியம் நேற்று (03.11.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான ஆறுமுகம் -குட்டிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் குணவதியின் அன்பு கணவரும் அமரர்களான நல்லையா, மார்க்கண்டு ஆகியோரின் சகோதரரும் அமரர் தம்பையா மற்றும் தங்கம்மா தம்பதியினரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அப்பன் கடை,
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

தகவல்
சு.குணவதி
(மனைவி)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 29 . 09 . 1929 — உதிர்வு 19 . 10 . 2007



### திருமதி இளையதம்பி நாகரத்தினம்

கடந்த 19.10.2007 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

30, கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (67608)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### பொன்னையா அழகராசா

இணுவில் தெற்கைப் (பாலாவோடை) பிறப்பிடமாகவும் குமரகோட்டம், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அழகராசா நேற்று (03.11.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-பொன்னம்மா தம்பதியரின் மகனும் நகுலேஸ்வரியின் அன்புக்கணவரும் புஸ்பரத்தினம், பாக்கியலட்சுமி, அருமைத்துரை ஆகியோரின் சகோதரனும் அமரர் செல்வரத்தினம், ஞானம்மா ஆகியோரின் மருமகனும் சாந்தகுமார்(சுவிஸ்), இராசகுமார்(சுவிஸ்), சசிகுமார்(சுவிஸ்), சுதேஸ்குமார்(சுரேஸ்), சந்திரகுமார் (கனடா), கவிதா(செல்வி-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயா(சுவிஸ்), சுசிகலா(சுவிஸ்), இராஜேஸ்வரி (சுவிஸ்), பிரியதர்சினி, யாழினி(கனடா), றமேஸ்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில். (67612)

தகவல்
அ.சுதேஸ்குமார்
(சுரேஸ்-மகன்)

### ஞானப்பிரகாசம் இம்மனுவேல் வேதநாயகம்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இம்மனுவேல் வேதநாயகம் அவர்கள்(01.11.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மற்றில்டா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - மேரி எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரன்(அருட் சகோதரன் - செபமாலை தாசர் சபை) காலஞ்சென்ற மேரி வெலிசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜோசவ் கீதபொன்கலன்(டென்மார்க்), ஆன் புஸ்பராணி, றெஜினா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேரி பேணடேற் அந்தோனிப்பிள்ளை(கனடா), விக்ரோறியா அந்தோனிப்பிள்ளை(இளைப்பாறிய ஆசிரியை, சில்லாலை), அந்தோனிப்பிள்ளை(இளைப்பாறிய பதில் ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்), மாரியம்மா யுவக்கீன்பிள்ளை(இளைப்பாறிய ஆசிரியை, புலோலி), காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை(இளைப்பாறிய உத்தியோகத்தர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்), அன்னம்மா அந்தோனிப்பிள்ளை(இளைப்பாறிய ஆசிரியை, சில்லாலை), காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை(கிராம சேவையாளர், சில்லாலை), செலஸ்தீன் பிள்ளை(மெய்கண்டான் அச்சகம், கொழும்பு), பற்றிக் இம்மனுவேல்(சில்லாலை) ஆகியேரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(05.11.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் சேமக்காலைக்கு எடுத்துசெல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

சில்லாலை தெற்கு. (67607)

தகவல்
இராஜேஸ்வரன் (C.R - மகன்)



### துரை தியாகராசா

(முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர், வவுனியா)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா தியாகராசா நேற்று (03.11.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா -அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தையல்முத்து தம்பதியினரின் மருமகனும் பராசக்தியின்(முன்னாள் ஆசிரியை, வவுனியா மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் சரஸ்வதி, பாலசிங்கம்(முன்னாள் உப அதிபர், ஆனைக்கோட்டை உயர்புலம் மெ.மி.த.க.பா), சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜீவபிருந்தினி, பிறேமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவகுமார், ஞாகாந்தன், உமாசங்கர், கேதீஸ், பவானி, புஜந்தரன், மதிவதனி, பகீரதி ஆகியோரின் மாமனாரும் மிதிலா, லாவண்யா, ஆரூரன், கோபி ஆகியோரின் பெரிய தந்தையும் குமாரதாசன், ரஞ்சனா, அனுசியாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கபடும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சிவகிரி', ஜி.பி.எஸ். றோட்,
கல்வியங்காடு.
லண்டன் தொ.பே. 00442084239761

தகவல்
அ.பாலசிங்கம்
(பொன்னு மாஸ்ரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கான தமது பணிகள் ஊடாக நட்சத்திரப் பெருமை சூட்டிய தமிழ்ச்செல்வன்

**போ**ர்க்களம் என்பது வீரம் செறிந்த வாழ்வை மட்டுமல்ல, வீரம் செறிந்த மரணங்களையும் உள்ளடக்கியது. போர்க்



களங்கள் பல கண்டு, விழுப்புண்களாகக் காயங்கள் பல பட்டும் தளராத வேங்கையாக வலம்வந்தவர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன். அவருடைய பிரிவு இன்று தமிழ்மக்கள் மனதில் ஆற்றமுடியாத காயமாக இறங்கியிருக்கிறது.

மனித வாழ்வில் சிலர் உயிருடன் இருந்தாலும் இறந்துவிட்டதுபோலவே மன உணர்வு காட்டும். அதே வேளை சிலர் இறந்துவிட்டாலும் அவர்கள் இறவாத மனிதர்களாக வாழ்வதாக அதே மனது காட்டும் என்பார்கள். அந்தவகையில் தமி

டும் பலரைச் சிந்திக்க வைத்தது.

அரசியல் விஞ்ஞானம், இராஜதந்திரப் போக்கு, உரையாடல்களில் குழப்பம் இல்லாத தன்மை, போராட்டத்தைச் சங்கடத்தில் மாட்டிவைக்காத போக்கு, என்று சகல வழிகளிலும் அட்டாவதானமாகச் செயற்படவேண்டிய கட்டாயம் இந்தப் பதவிக்குள் இருந் தது. அதை சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு வழங்கியது துணிச்சலான முடிவு. அதையும் தாண்டி அப்பதவியை ஏற்றுக்கொண்டது துணிச்சலுக்கெல்லாம் துணிச்சலான காரியம். ஏனென்றால் இந்தப் பணியில் பாராட்டுப் பெறுவது அதுவும் தலைவரின் பாராட்டுப் பெறுவது இலகுவான காரியமல்ல. எப்போதும் போராட்டத்தில் இருப்பவர்கள் அரசியல்துறைப் பணிகளைப் பொறுப்பெடுக்கும்போது போராளிகளைச் சோர்வடைய விடக்கூடாது. அதேவேளை, சர்வதேச சமுதாயத்தில் நம்பிக்கையையும் அழியவிடக்கூடாது. இந்த இரண்டு விடயங்களையும் இரு கைகளில் ஏந்தி மக்கள் நல்வாழ்வைக் குறியாகக் கொண்டு கயிற்றில் நடப்பது போல நடக்கவேண்டும்.

குழல் துப்பாக்கிகள் போல யு.என்.பியில் இருந்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியிலிருந்தும் முழங்கினார்கள். இவர்களை எதிர்கொண்டு சர்வதேச சமுதாயத்தை திரும்பிப் பார்க்கவைக்க வேண்டியிருந்தது.

முதன்முறையாக சிங்கள இராஜதந்திரத்தில் இரண்டு புத்தியுள்ள இராஜதந்திரிகள் இணைந்திருந்தனர். இவர்கள் இருவரும் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்நாட்டில் எதிர்நோக்கிய சவால்கள்.

மேலும் இதில் இன்னொரு விடயமும் இருக்கிறது. ஆசிய இராஜதந்திரிகளின் போக்கில் இருந்து மேலைநாட்டு இராஜதந்திரிகள் வேறுபட்டவர்கள். பொதுவாக ஆசிய இராஜதந்திரம் மேற்படையில் நஞ்சும், உட்பகுதியில் வக்கிரமும் கொண்டிருக்கும். மேலை நாட்டு இராஜதந்திரம் வெளிப்படையில் ஜனநாயகப் போர்வையும் உட்பக்கத்தில் துவேசமும் நஞ்சும் கலந்து நிற்கும். இந்த இரண்டையும் சந்திக்கவேண்டிய களத்தில் சு.ப. தமிழ்ச்செல்வன் நடைபயின்றார்.

நாடு நாடாகச் சென்று கதிர்காமர் தீட்டி வைத்திருந்த தமிழர்களுக்கு எதிரான பொய்யான கருத்தோவியங்களை எல்லாம் தனது கருத்துக்களால் மாற்றியமைக்கப் பாடுபட்டார். தனதுஉள்ளத்தில் உள்ள

கிறதோ அத்தனை அடிப்படைகளையும் தமிழீழத்தில் படபடவென உருவாக்கத் தொடங்கினார்கள். சகலவிதமான படையணிகள், வங்கியமைப்புக்கள், ஏ-9 பாதையில் வரிவிதிப்பு என்று சகல பணிகளும் ஆரம்பமானது. இந்தப் பாதையில் பயணிக்கும் சிங்கள இராணுவம்கூட வரிகட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் மூலம் தெளிவான ஒரு தனியரசு அடையாளம் காட்டப்பட்டது. இது வெற்றுத்தனமான தமிழீழப் பிரகடனத்தைவிட மிகவும் காத்



திரமானதாக அமைந்தது. ஒரு நாட்டுக்குரிய சகல கட்டமைவுகளையும் கொண்டுள்ள தமிழ் மக்களுக்கு அதிகாரமற்ற வெற்று மாவட்டசபை தீர்வல்ல என்ற உண்மையை அந்த முயற்சிகள் எடுத்துச் சொல்லின.

**நட்சத்திரப் பெருமைகளை சூட்டியவர்**

இத்தனை காரியங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான் சு.ப. தமிழ்ச்செல்வன் பேச்சுவார்த்தைக் களத்தில் முக்கியமான ஒருவராகத் திகழ்ந்தார். அதனால்தான் ஈழத்தமிழரின் போராட்ட வாழ்வில் அழிக்க முடியாத நட்சத்திரப் பெருமையை அவர் தனது சிறிய வாழ்வில் எட்டித் தொட்டார்.

சு.ப.தமிழ்ச்செல்வனிடம் ஓர் இயல்பு இருந்தது. அதைத் தாயன்பு என்று கூறலாம். விடுதலைப் போராட்டத்தில் ஏதாவது சிறிய தவறு நடந்தாலும் முதலில் தேடிச் சென்று தமிழ்ச்செல்வனைக் காண்பது நல்லது என்ற கருத்து பலரிடையே இருந்திருக்கிறது. சிரித்த முகத்துடன் அனைவரையும் எதிர்கொண்டு, அனைவரையும் சமாதானம் செய்து போராட்டத்தின் பாதையில் ஒன்று படுத்துவதில் அவர் வல்லவராகத் திகழ்ந்தார்.

தமிழ்ச்செல்வன் டென்மார்க்குக்கும் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களைச் சந்தித்தார். எது செய்தாலும் சரியாகச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். தலைவரின் மனதினைப் பிரதிபலிக்கும் சரியான கண்ணாடியாகவும் அவர் திகழ்ந்தார். போராளியாக இருந்து

## அனைவரையும் சிரித்தமுகத்துடன் எதிர்கொண்டு சமாதானம் செய்யும் ஆற்றலின் அடையாளம் அவர்

ழீழப் போராட்ட வரலாற்றில் என்றுமே இறந்துபோகாத சில முகங்கள் இருக்கின்றன. அவர்களில் ஒருவர்தான் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

சு.ப.தமிழ்ச்செல்வன் ஓர் இளம் போராளியாகத் தன்னைப் போரில் இணைத் துக்கொண்டபோது அவருடைய அமைதி, சிரித்த முகம், அன்புமிக்க மனம் இவைகளை அவதானித்துப் பார்த்த சிலர் வெளியே நடைபெறும் ஈவு இரக்கமில்லாத கொடிய போர்க்களத்திற்கு இந்த இளைஞன் பொருத்தமானவனா என்று சிந்தித்ததாகக் கூறுவார்கள்.

ஆனால், காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. போர்க்களத்தில் அவர் மற்றெல்லோரையும்விட தலைசிறந்த போராளியாக மாறினார். குறுங்காலத்தில் அனைவருடைய மனங்களிலும் உயர்வான இடத்தைப் பிடித்துக் கொண்டார். போராட்டத்தில் ஒரு பிரிவில் மட்டும் அவர் பணியாற்றவில்லை. பல்வேறு தளங்களில் முத்திரை பதித்தார்.

அதன்பின்னர் கையில் தடி, கயிற்றில் கட்டிய மூக்குக்கண்ணாடி, வெள்ளை நிறமான சேட், பளீரென சிரித்த முகம் இவைகளோடு தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளராகத் தலைவர் அவரை அடையாளங் காட்டினார். அப்பொழுதுதான் சு.ப.தமிழ்ச்செல்வனை எல்லோரும் சட்டெனத் திரும்பிப் பார்த்தனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது தமிழர் மத்தியில் இருந்து இலங்கைக்குள் பரவி தென்னாசியாவின் பார்வையைப் பெற்று, உலகளாவிய நிலையில் விரிவடைந்தது. அந்தப் போராட்டம் உலக மட்டத்தில் விரிவடைந்தபோதுதான் சு.ப. தமிழ்ச்செல்வன் பேச்சுவார்த்தை ஆடுகளத்திற்கு வந்தார். இந்த நேரத்தில் அவருக்கு இப்பொறுப்பு வழங்கப்பட்டமை மீண்

அப்பணியை சு.ப.தமிழ்ச்செல்வன் எப்படிச் செய்யப்போகின்றார் என்பது முக்கிய கேள்வியாக இருந்தது.

**உலக நாடுகளுக்குச் சென்று போராட்டத்திற்கு வலுச் சேர்த்தார்**

அந்தக் கேள்விகளுக்கெல்லாம் நல்ல

**எப்போதும் சிரித்திடும் முகம்**

எப்போதும் சிரித்திடும் முகம்!
எதிர்ப்புகளை எரித்திடும் நெஞ்சம்!

இளமை இளமை இதயமோ
இமயத்தின் வலிமை! வலிமை!

கிழச்சிங்கம் பாலசிங்கம் வழியில்
பழமாய் பக்குவம் பெற்ற படைத்தளபதி!

உரமாய் தன்னையும்
உரிமைப் போருக்கென உதவிய
உத்தம வாலிபன் - உயிர் அணையான்
உடன் பிறப்பணையான்
தமிழர் வாழும் நிலமெலாம்
அவர்தம் மனையெலாம்
தன்புகழ் செதுக்கிய
செல்வா - எங்கு சென்றாய்?



(தமிழக முதல்வர் மு.கருணாநிதி விடுத்த இரங்கல் செய்தி இது)

பதிலாக அவர் விளங்கினார். விடுதலைப் புலிகள் - அரசு பேச்சுவார்த்தை ஆரம்பித்த போது தாய்லாந்து, சுவிஸ், நோர்வே, டென்மார்க், ஜேர்மனி என்று பல நாடுகளுக்கும் இடைவிடாது பறந்து போராட்டத்திற்கு உலகம் எல்லாம் புது வலுவைச் சேர்த்தார். அடுத்து இக்காலத்தில் அவருடைய ஆடுகளத்தில் இரண்டு பெரிய எதிர்ப் பாத்திரங்கள் தரப்பில் ஆடிக்கொண்டிருந்தன. ஒருவர் தமிழரான லக்ஸ்மன் கதிர்காமர், இன்னொருவர் சிங்[illegible] இவர்கள் இரு[illegible]

உண்மை ஒளி என்ற ஒன்றே ஒன்றினால் போலியான பிரசாரங்களை எல்லாம் முறியடித்தார். அத்துடன் நின்றுவிடாமல் சரியாக எல்லாவற்றையும் அவதானித்து, அவதானித்தவைகளைத் தலைவரிடம் குழப்பமின்றிச் சமர்ப்பித்து பேச்சுக்களை நெறிப்படுத்தினார்.

சு.ப.தமிழ்ச்செல்வன் பேச்சுவார்த்தைக் களத்தில் நின்ற ஒவ்வொரு தடவையும் சிங்கள அரசு பின்னடைவையே சந்தித்தது. மறுபுறம் எதிரிகளால் வகுக்கப்படும் விவரங்களை மதிப்பிட்டு அதற்கமைவாக தமிழர் தாயகத்தில் பல நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. ஏனென்றால் ஓர் அரசுக்குரிய அத்திவாரங்களைப் படிப்படியாக இட்டுச்செல்ல வேண்டும் என்ற உண்மையை தமிழ்ச்செல்வனின் பயணங்கள் திட்டவட்டமாக எடுத்துரைத்தன.

**மாவட்ட சபைகள் தீர்வல்ல என்று உணர வைத்தவர்**

ஒரு போராட்டத்தில் எதைக் கோருகிறார்கள் என்பதற்கு ஒரு வரையறை இருக்கிறது. உதாரணமாக பசித்தவனுக்கு உணவு, கார் ஓடுபவனுக்கு கார் என்று தகுதிகளுக்கு ஏற்பவே அவரவர்க்குரிய தேவைகள் பூர்த்தியாகும். இதுபோலவே நம்மிடமுள்ள அடிப்படைத்தேவைகளை முன்வைத்துத்தான் தீர்வுத் திட்டத்தில் எமக்குரிய தேவைகளை வலியுறுத்தலாம்.



ஒரு விதமான அத்திவாரங்களுமே இல்லாமல் சிங்களவர் நம்மீது தாக்குகிறார்கள் என்று உணர்ச்சிகரமாகப் பேசித் தமிழீழம் கேட்கமுடியாது. உலகத்திலுள்ள ஏதாவது ஒரு நாட்டை நம்பியும் தமிழீழம் அமைக்க முடியாது. அப்படியானால் எப்படியாகத் தமிழீழம் அமைக்கலாம். அதற்கான விடையைத்தான் வெளிநாடுகளிலிருந்து தமிழ்ச்செல்வனின் பயணங்கள் கொண்டு வந்து சேர்த்தன.

ஒரு தேசம் என்னென்ன அடிப்படைகளை எல்லாம் தன்னகத்தே கொண்டிருக்

அரசியல்துறைப் பொறுப்பாளராகி இன்று பிரிகேடியர் தரத்திற்கு உயர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளமை அவர் பெற்ற ஆற்றலின் அடையாளமே.

சுபம் என்றால் முடிவு என்று கூறுவார்கள். சு.ப.தமிழ்ச்செல்வன் படுகொலையுடன் சிங்கள அரசு பேச்சுக்களுக்கு சுபம் போட்டுவிட்டதாகப் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் அனைவரும் மதிக்க வேண்டிய மாமனிதன் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் என்றால் அது மிகையல்ல.

கி.செ.துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்செல்வன் வழியில் பல இளைஞர்கள் தோன்றி விடுதலைப் போரை இனியும் வழி நடத்துவார்கள்

## பழ.நெடுமாறன் சூளுரை

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிந்திய இரத்தத்திலிருந்து ஏராளமான இளைஞர்கள் தோன்றி தமிழீழ விடுதலைப் போரைத் தொடர்ந்து நடத்துவார்கள் என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

அரசியல்துறைப் பொறுப்பாளரின் மறைவு குறித்து நெடுமாறன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிங்கள வான்குண்டு வீச்சுக்குப் பலியாகி உயிரிழந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். கடந்த 25 ஆண்டு காலத்திற்கும் மேலாக தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் நம்பிக்கையைப் பெற்றவர். பல்வேறு களங்களில் தலைமை தாங்கிப் போராடியவர்.

இளம் வயதில் சர்வதேச ராஜதந்திர அரசியலில் சிறந்து விளங்கியவர். புலிகளின் சார்பில் சமரசப் பேச்சுக்களுக்கு தலைமை தாங்கிய தளபதியைக் குறிவைத்துக் குண்டு வீசிப் படுகொலை செய்ததன் மூலம் இனி சமரசப் பேச்சுகளுக்குச் சிங்கள அரசு தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்தி விட்டது.

மாவீரர்கள் புதைக்கப்படுவதில்லை, விதைக்கப்படுகிறார்கள் என்பதற்கு இணங்க மறைந்த தமிழ்ச்செல்வன் சிந்திய இரத்தத்திலிருந்து ஏராளமான இளைஞர்கள் தோன்றி விடுதலைப் போரைத் தொடர்ந்து நடத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

மறைந்த தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் தமிழகமெங்கும் கூட்டங்களை நடத்தும்படி அனைத்து தமிழ்த்தேசிய அமைப்புகளை வேண்டிக்கொள்கிறேன் - என்றுள்ளது. (202)



தமிழ்ச்செல்வனின் மறைவிற்கு தமிழகத்தில் நடத்தப்பட்ட அஞ்சலி நிகழ்வுகள்

# தமிழ்ச்செல்வனைப் பலி கொண்டமை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,நவ.4

சிங்கள அரசின் கொடூரமான குண்டு வீச்சுகளினால் தமிழ்ச் செல்வனையும் ஏனையவர்களையும் நாம் இழந்துள்ளோம். ஆனால், இதன் விளைவுகள் பெரிதும் பாரதூரமானவையாக இருக்கப் போகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்றக் குழு உப தலைவருமான மாவை சேனாதிராஜா விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தமிழ்ச்செல்வனை இழந்து விட்டாலும் மேலும் ஆயிரம் ஆயிரம் தமிழச்செல்வன்கள் உருவாகித் தமிழ் தேசியப் போராட்டத்தில் நாம் வெற்றி அடைவது உறுதி என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒப்பற்ற அதி உயர் தியாகத்தினைச் செய்துள்ள, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தளபதி.சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் லெப்டினன் கேணல் அன்புமணி(அலெக்ஸ்), மேஜர் மிகுந்தன், கப்டன் நேதாஜி, லெப்டினன்ஆட்சிவேல், லெப்டினன் வாகைகுமரன் ஆகியோருக்கு எமது வீரவணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

தளபதி தமிழச்செல்வனும் ஏனைய தியாகிகளும் தமிழீழ விடுதலைப் போர்க் களத்தில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர் என்ற செய்தி எம்மைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது.

இதனை நம்ப முடியவில்லை என்றாலும் செய்திகள் எம்மை நம்பவைத்து விட்டன. தமிழீழத் தேசத்தின் விடுதலைக்கு மேலும் மிக உயர்ந்த தியாகம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒப்பற்ற தியாகமாக அமைந்துவிட்டது. தமிழ்த் தேசியத்திற்காக தம்முயிரை ஈர்த்துள்ள இவர்களுக்கு எமது வீரவணக்கத்தை சமர்ப்பிக்கின்றோம்.

சிங்கள அரசின் இக்கொடூர குண்டு வீச்சினால் தமிழ்ச்செல்வனையும் ஏனையவர்களையும் நாம் இழந்திருந்தாலும் அதனுடைய விளைவுகள் பெரிதும் பாரதூரமானவையாக இருக்கப்போகின்றன.

தமிழ்மக்களும் தமிழ் விடுதலை விரும்பிகளும் தங்களின் அஞ்சலியை அமைதியான முறையில் அர்ப்பணிக்குமாறு வேண்டுகிறோம். - எனவும் மாவை சேனாதிராஜா தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விரிவான அறிக்கை பின்னர் வெளியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.


**மணமகள் தேவை**

பிரித்தானியாவில் பிரஜா உரிமை பெற்ற கௌரவ இந்து குடும்பத்தைச் சேர்ந்த சொந்தமாகத் தொழில் செய்யும் 33 வயதான கண்பார்வையற்ற மணமகனுக்கு 25-30 வயதிற்கிடைப்பட்ட நற்பண்பும் ஒழுக்கமும் உடைய மணமகள் தேவை. சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.3021,
மே/பா உதயன். (67552)

**புறொயிலர் விற்பனைக்கு**

சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் 1Kg 550/= மட்டும்.
**குமரன் பாம்,**
227, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

**மணமகள் தேவை**

உயர் பதவி வகிக்கும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்குத் தகுந்த உள்ளூர் மணமகள் தேவை. (வயது - 43). குழந்தை இல்லை. (விசாகம் - துலாம்).
தொடர்பு: விளம்பர இல.3022,
மே/பா உதயன். (67562)

**நீரிழிவு நிவாரணி**

சிறுகுறிஞ்சா (Gymnema) இலைப்பவுடர் குருதிக் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் குறைக்கும். செயல் இழந்த இன்சுலின் தயாரிக்கும் B கலங்களை உயிர்ப்பிக்கும். இதன் பயனாக நீரிழிவைக் கட்டுப்படுத்துவதுடன் குணமாக்கும்.
வாழ்க்கைச் செலவைக் குறைக்க,
புதிய விலை- 100g ~~250~~ ரூபா 200/=
**BIO TEC**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(67564) T.P.: 021 4590907

**புனிதர் சாள்ஸ் தினம்**



யா/புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள் இன்று (04.11.2007)
ஞாயிற்றுக்கிழமை பாடசாலைத் தினமாகிய
புனிதர் சாள்ஸ் தினத்தைக்
கொண்டாடுகின்றார்கள்.

இவ்வாண்டு புனிதர் சாள்ஸின் திருவுருவச்
சொரூபம் எமது பாடசாலை ஆசிரியர்
''சித்திரச் சீராளன்'' டொமினிக் ஜீவா
அவர்களினால் நிர்மாணிக்கப்பட்டு
யாழ்.மறைமாவட்ட ஆயர்
**மேதகு தோமஸ் சௌந்தரநாயகம்**
ஆண்டகை அவர்களினால் 03.07.2007
அன்று பாடசாலை முன்றிலில்
திருநிலைப்படுத்தப்பட்டது.

யா/புனிதர் சாள்ஸ் ம.வி
யாழ்ப்பாணம்.
(67584)


## சித்தமருத்துவ வைத்தியசாலை புதிய இடத்தில்

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.நாவலர் வீதியில் கீரிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் யாழ். மாநகர சபையின் மகப்பேற்று நிலையத்தில் இயங்கி வந்த, மாநகர சபையின் சித்தமருத்துவ கிளை வைத்தியசாலை நாளை மதியம் திங்கட்கிழமை முதல் இல.110, B.S.ஒழுங்கை, மானிப்பாய் வீதிக்கு (பள்ளிவாசலுக்கு அருகாமையில்) இடமாற்றம் செய்யப்படவுள்ளது. (1)

## கைதடி நூலகத்தில் வாசிப்பு மாத நிகழ்வு

நாவற்குழி,நவ.4

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கைதடி பொதுநூலகத்தினர் நடத்தும் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

வைத்திய கலாநிதி பொ.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கைதடி சித்த மருத்துவ பீடத்தலைவர் வைத்திய கலாநிதி திருமதி சி.பஞ்சராசா கலந்துகொள்வார்.

வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இந்நிகழ்வில் வைத்து பரிசில்கள் வழங்கப்படும். (202-288)

## அபிராமி அந்தாதி இலவசமாகப் பெறலாம்

சுழிபுரம்,நவ.4

அபிராமி அந்தாதி நூறு பாடல் கொண்ட நூலை வழக்கம்பரை பஜனைச் சபையினர் இலவசமாக வழங்கி வருகின்றனர்.

தபால் மூலமாக நூலை பெற்றுக்கொள்ள விரும்புவோர் பெரிய தபால் உறையுடன் கூடிய முத்திரையை செயலாளர் பஜனைச் சபை, வழக்கம்பரை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனை, சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயத்தில் செவ்வாய்க்கிழமைகளில் பிற்பகல் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனை நேரங்களில் நூலைப் பெற்றுக் கொள்ளலாம். தனியொருவர் வழங்கிய நன்கொடையைக் கொண்டே இந்நூல் இலவசமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (203-28)


**University of Jaffna, Sri Lanka**

**Faculty of Science**

**WALK - IN INTERVIEW**

Walk in interview for the appointment of following posts will be held at **10.00 a.m. on 12.11.2007 at the Board Room of this University.**

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview.

(i) **Post of Asst. Lecturer (on Contract)** in Botany/ Zoology/ Chemistry/ Physics/ Mathematics/ Statistics/ Computer Science.
**Required Qualification:**
A Special degree in the relevant subject with class.

(ii) **Post of Demonstrator (on contract)** in Botany/ Zoology/ Chemistry/ Physics.

(iii) **Post of Instructor (on contract)** in Mathematics/ Statistics/ Computer Science/ Computing.

**Required qualification for the posts (ii) & (iii)**
A degree in the relevant subject. Candidates awaiting results at a final degree examination are also welcome.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates.

**Registrar,**
**University of Jaffna.**
**01.11.2007** (C/54225)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

தோற்றம் 01 ✱ 02 ✱ 1944



மறைவு 05 ✱ 10 ✱ 2007

**சுந்தரம் இராசதுரை**

கடந்த 05.10.2007 அன்று இறைபதம் அடைந்த எம் அன்புத் தெய்வம் சுந்தரம் இராசதுரை அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து துயர்பகிர்ந்தோருக்கும் பல வழிகளில் நாடிவந்து உதவிபுரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் வீதி
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (67583)

தகவல்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஷ்டங்கள் சூழ்ந்த போதிலும் கிடைக்கும் வளங்களுடன் திறமையாளர் உயரலாம்

## யாழ்ப்பாணத்தில் இப்படியெல்லாம் செய்யமுடியுமா என்று பார்வையாளரை வியக்க வைத்த கைத்தொழில் கண்காட்சி

கைத்தொழில் துறைசார்ந்த தேசிய மட்டப் போட்டிகளுக்கு முன்னோடியாக வடமாகாண கைத்தொழில்துறை திணைக்களம் கடந்த 16ஆம்,



17 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டத்தில் கைத்தொழில் துறை சார்ந்த கண்காட்சியை நடத்தியது.

நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கண்காட்சியைத் திறந்து வைத்தார். இதில் இங்குள்ள அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த பல்வேறு அமைப்புக்கள் கலந்து கொண்டு தமது ஆக்கங்களைப் பார்வைக்கு வைத்திருந்தன.

கைத்தொழில் துறை, கைத்தறி, பாடசாலைகள் என மும்முனை ஆக்கங்களைக் கொண்டதாகக் காட்சிப் பொருள் கள் வகுக்கப்பட்டிருந்தன. மூலப்பொருள்கள் இன்மை, போக்குவரத்துத் தடைகள் போன்ற பிரச்சினைகளுக்கு அப்பால் கிடைக்கக்கூடிய வளங்களையும் திறைமைகளையும் பயன்படுத்தும் பட்சத்தில் எமது பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்ப முடியும். இன்றைய அசாதாரண சூழலிலும் உள்ளதை - கிடைப்பதை - வைத்துக்கொண்டு நம்மால் உயரமுடியும் என்ற யதார்த்தத்தையும் மக்களுக்கு எடுத்துக் காட்டக் கூடியதாக விளங்கியது இக் கண்காட்சி.

கடற்கரையோரப் பகுதிகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையிலும் கூட அங்கு கிடைக்கக்கூடிய சிற்பி, சோகி வகைகளை சேகரித்து அவற்றிலிருந்து சிறிய குருவிகள், மாலைகள் என பலதரப்பட்ட அலங்காரப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தவிர பிளாஸ்டிக் போத்தல்கள், வெட்டியெடுக்கப்பட்ட துணிகள் போன்ற கழிவுப் பொருள்கள், பஞ்சுவகைகளைப் பயன்படுத்தி பறவைகள், கரடி, நாய் போன்றவைகள் உட்பட பாவைப் பிள்ளைகள், தென்னை மரங்கள் எனவும் அலங்காரப் பொருள்கள் நிறைந்து காணப்பட்டன. கடதாசி, றெஜிபோம், மரப்பலகை, மணல் சீமெந்துக் கலவைகள் கொண்டு உருவாக்கப்பட்ட பொருள்கள் எனவும் ஏராளமாகக் காணப்பட்டன. நினைவுத் தூபிகள், மாதிரி வீடுகள், தாஜ் மஹால், மதவழிப்பாட்டுத் தலங்களின் மாதிரிகள், விநாயகர், சிவன், புத்தர் உருவங்கள் ஆகியவற்றுடன். சிரட்டைகள், பனைஓலைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், தும்புப் பொருள்கள் என நம் வாழ்வுடன் நெருங்கிய, நாம் காணக்கூடிய, பயன்படுத்தக் கூடிய அனைத்துமே காட்சிப்பொருளாக உருவாக்கப் பட்டிருந்தன.

கைத்தறித்துறை பல நேர்த்தியான துணிவகைகளைக் காட்சிப்படுத்தியது . சேலைகள், படுக்கை விரிப்புகள், சிறுவர்களுக்கான ஆடைகள், மேசைவிரிப்புக்கள், கேட்டின், கம்பளி நூலினால் ஆன ஆடைகள் என்பன பல்வேறு டிசைன்களில் தயாரிக்கப் பட்டிருந்தன. பாதுகாப்பான உணவுவகைகளைத் தயாரிக்கும் முறை, நிறம் மாறாத வற்றல்களைத் தயாரித்தல், பூசனிக்கேக், பூசனி அல்வா, கச்சான்பாகு என உற்பத்தி பயிற்சி வழங்கும் நிலையம், மதியொளி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன அறிமுகப்படுத்திய பொருள் க ளும் காட்சியில் இடம் பெற்றிருந் தன.

அலங்காரப் பொருள் கள், கைத்தறிப் பகுதி, உணவுப்பொருள் களுக்கான காட்சிப் பகுதிகளில் பெண்கள் கூடுதல் நேரத்தைச் செலவிட்டதையும் இள்ம் பெண்கள் அலங்காரப் பொருள்கள், துணிவகைகள் பகுதிகளிலும் நடுத்தரவயதுக் குடும்பப் பெண்கள் உணவுப் பொருள்களுக்கான பகுதிகளிலும் கூடிய அக்கறை செலுத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது.


ஜி.சீ.ஈ.சாதாரண தரத்திற்கு தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம் முக்கியம் என்பதால் கணனிப் பகுதியில் மாணவர்கள் ஆர்வம் காட்டினர்கள். குறிப்பிட்ட பாடநெறிகளை உள்ளடக்கும் முகமாக ஒரு தரமான கணனியைத் தெரிவு செய்வதற்கும் அதன் பாகங்களின் உட்புறத் தொழிற்பாடுகளைத் தெரிந்து கொள்ளக் கூடியதுமாக கணனி வன்பொருள் பயிற்சி நிலையத்தின் காட்சி இடம்பெற்றிருந்தது.

யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் நிறுவன முகாமையாளர் மகேந்திரகுமாரினால் உருவாக்கப்பட்ட பற்றறியில் இயங்கும் சக்கர நாற்காலி, இணுவில் இந்துக் கல்லூரி மாணவன் நிரோசனின் கைவண்ணத்தில் உருவான டைனோசர், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஆனந்தசீலனின் தயாரிப்பான ஏழு அடி உயர துவிச்சக்கர வண்டி, தும்புக்கயிறுகளைக் கொண்டு செய்யப்பட்ட நாரை என்பன அனைவரையும் கவர்ந்தன.

பல்வேறு திறமைகளைக்கொண்ட உற்பத்தியாளர்களை இனங்காணவும் அவர்களுக்கு ஊக்கம் அழிப்பதன் மூலம் புதியபொருள்களைத் தயாரிக்கவும் சந்தைப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்தவும் சிறியதொழில் முறைகளுக்கு வழிகாட்டக் கூடியதுமாக அமைந்திருந்த அக் கண்காட்சி பார்வையாளர்களை எந்த வகையில் கவர்ந்தது எனக் கேட்டபோது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் முடிவை எதிர்பார்த்திருக்கும் கோப்பாயைச் சேர்ந்த ஆஷா இன்றைய சூழலில் யாழ்ப்பாணத்தில் கிடைக்கக்கூடிய வளங்களையும் கழிவுப் பொருள்களையும் பயன்படுத்தி எல்லோருமே பாராட்டத்தக்க வகையில் இப்படி ஒரு கண்காட்சியை நடத்தியது மகிழ்ச்சிக் குரியது. மாணவர்களுக்கு மிகுந்த பயனுடையது. புதிய விடையங்களைத் தெரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது என்றார்.

கண்காட்சியில் இடம் பெற்ற அனைத்துமே நு ட் ப ம ா கவும் சிறப்பாகவும் தமது கல்விக்கு உபயோகமாகவும் இருந்ததென பாடசாலை மாணவர்கள் கூறினார்கள்.

குடாநாட்டிலுள்ள உற்பத்தியாளர்களின் திறமை புலப்படுகிறது. முன்னர் பார்த்திராத



கலைத் திறன்களை இங்கு காணமுடிந்தது. குறிப்பாகப் பாடசாலை மாணவர்களின் திறமை வெளிக்கொணரப்பட்டிருந்து. ஆசிரியர் என்ற வகையில் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நல்ல முயற்சி என்றார் வேலணை நடராசா வித்தியாசாலை ஆசிரியர் சுமந்திரன்.

தொழில்துறைசார்ந்த திட்டங்களை - உண்மையான தேவைகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய முழுமையான அறிவை அனைவரும் பெறவேண்டும். அதற்கு உதவும் ஒரு ஏற்பாடே இக் கண்காட்சி என மாவட்ட தொழிற்துறை அலுவலர் ப.ராகவன் தெரிவித்தார்.

வடக்கு மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான இலக்கை நோக்கிய முயற்சியான உள்ளூர் வளப் பயன்பாடு, மனித வளப் பயன்பாடு, தொழில்நுட்ப அறிமுகம் குறித்த விடயங்களை உள்ளடக்கியதாக இக் கண்காட்சி அமைந்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் இப்படி எல்லாம் செய்யமுடியுமா? பார்வையாளர்கள் பலர் வியப்படைந்ததில் ஆச்சரியம் இல்லை.

இக்கண்காட்சியை சுமார் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கண்டுகளித்தனர்.

**நம்பி**

# நீங்கள் ஏன் நோயாளராக வேண்டும்...? அதனைத் தடுப்பதற்கு வியாதியின் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சையை நாடுங்கள்

சமகால யாழ்ப்பாணம் இன்றைய சமூக, கலாசார, அரசியல் மாற்றங்களின் பின்னணியில் பல்வேறு இன்னல்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றது. யாழ்.மக்கள், அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் அவர்களின் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் தனக்கென தொடர்ந்தும் ஒரு முக்கிய இடத்தை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.



"மருத்துவ ஆலோசனை"
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

சமகால வாழ்வியல் நிலைமைகள், அதிகரித்த வாழ்க்கைச் செலவினம், நேரமின்மை மற்றும் அதிகரித்த மன உளைச்சல் போன்ற காரணங்களையிட்டு பெரும்பாலான மக்கள் தமது நோய் நிலைமை முற்றும்வரை வைத்திய ஆலோசனையைப் பெறுவதிலோ, சிகிச்சை பெறுவதிலோ அக்கறை காட்ட தலைப்படாதவர்களாகவே காணப்படுகின்றனர். இதன் காரணமாக, சிகிச்சை மூலம் எளிதில் குணமாக்கப்படக்கூடிய பல்வேறு நோய்களும் கூட மக்களை நிரந்தர நோயாளர் என்ற நிலைமைக்கோ அல்லது மரணத்துக்கோ இட்டுச்செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவை மக்களை அதிகரித்த மன உளைச்சலுக்கும், தங்கிவாழும் நிலைமைக்கும் உள்ளாக்குகின்றன.

மேற்படி அவல நிலைமையை ஒழிக்கும் முகமாகவும், மக்களுக்கு ஆரோக்கியமான ஒரு நாளைய பொழுதை உருவாக்கிக் கொடுக்கும் முகமாகவும், காலங்காலமாக யாழ.மக்களின் சுகாதார மேம்பாட்டில் அளப்பரிய பங்காற்றி வரும் யாழ்.மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவத்துறை யாழ.மக்களின் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு, மருத்துவத்தின் பல்வேறு துறைகளிலும் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் மிக்க வைத்தியர்களின் ஆலோசனைகளை ''உதயன்'' பத்திரிகை மூலம் உங்களுக்கு வழங்கத் தலைப்பட்டுள்ளது.

உங்கள் வினாக்களுக்கு அந்தந்தத் துறைகளில் அனுபவம் மிக்க பின்வரும் வைத்திய நிபுணர்களால் பதிலளிக்கப்படும்.

| | |
|---|---|
| Dr.S. ரவிராஜ் | - சத்திரசிகிசிசை |
| Dr.S. கௌரி | - பொது மருத்துவம் |
| Dr.S. குகதாசன் | - கண் மருத்துவம் |
| Dr.S. சிவயோகன் | - உள மருத்துவம் |
| Dr.P. லக்ஸ்மன் | - இதய மருத்துவம் |
| Dr.K. உமாபதி | - முறிவு, நெறிவு சத்திரசிக்சை |
| Dr.K. அருள்மொழி | - குழந்தை மருத்துவம் |
| Dr.M. ஜெயக்குமாரன் | - புற்றுநோயியல் |
| Dr.K. முகுந்தன் | - பெண் நோயியல், |
| | - மகப்பேற்று மருத்துவம் |

அவர்களுடன் உங்கள் பொது சுகாதாரம், பாலியல் சுகாதாரம் தொடர்பான வினாக்களுக்கு Dr.C.S.நச்சினார்கினியன் அவர்களும் பதிலளிப்பார்.

உங்கள் கேள்விகளும் பதில்களும் பிரதி ஞாயிறு தோறும் உங்கள் உதயனில் பிரசுர மாகும்.

**மருத்துவ ஆலோசனை இலகுவாக்கப்படுகிறது**

**வினாக்களைத் தொடுங்கள்**

இதன்மூலம் மக்களிடையே சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நோய்நிலைமையை மக்கள் தாமாகவே இனம் கண்டு கொள்ளவும் தகுந்த சிகிச்சையை நாடவும் வழிவகை செய்ய சமுதாய மருத்துவத்துறை உறுதிபூண்டுள்ளது.

இச்செயற்திட்டத்தில் மக்கள் இலகுவாகப் பங்கெடுக்கும்வகையிலும், தமது வினாக்களையும் சந்தேகங்களையும் இலகுவில் வெளிப்படுத்தி தொடுக்கும் வகையிலும் யாழ்.போதனா வைத்திய சாலைக் கிளினிக்குகள், இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக பிரதான தொகுதி, மருத்துவபீடம், நுண் கலைப்பீடம் ஆகியவற்றிலும், கீழ்க்கண்ட பாடசாலைகளில் உள்ள நூலகம் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளிலும் வினாசேகரிப்பு பெட்டிகளை நிறுவியுள்ளது.

இப்பெட்டிகளில் உங்கள் வினாக்களை நேரடியாகச் சேர்ப்பதன் மூலமாகவேர ஆசிரியர்கள் மாணவர்களினூடு சேர்ப்பதன் மூலமாகவோ நம்மை அடைவதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணம்:- இந்துக்கல்லூரி, மத்தியகல்லூரி, பரியோவான் கல்லூரி, புனித புத்திரிசியார் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம்.

சாவகச்சேரி:- இந்துக்கல்லூரி, ட்றிபேர்க் கல்லூரி, மகளிர் கல்லூரி.

பருத்தித்துறை:- ஹட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,வட இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி.

அல்லது,

மருத்துவ ஆலோசனை, மருத்துவபீடம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழப்பாணம். என்ற முகவரிக்குக் கடிதமூலமாகவோ 0777 179268 தொலை பேசி எண்ணுக்கு SMS மூலமாகவோ தொடர்பு கொண்டு உங்கள் வினாக்களைப் பதிவுசெய்யலாம். (உங்கள் பாடசாலை அல்லது நிலையங்களையும் இச் செயற்திட்டத்தில் உள்ளடக்க விரும்பினும் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம் உங்கள் கருத்துக்களும் வரவேற்கப் படுகின்றன).

*பிற்குறிப்பு:- உங்கள் வினாக்களில் வயது, பால் என்பன கட்டாயம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பெயர் குறிப்பிடப்பட வேண்டிய அவசியம் இல்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த யாழ்.மத்திய கல்லூரியின் மாணவியும், பாலராசா - அழகினி தம்பதியினரின் புதல்வியுமான

செல்வி உமாதேவி பாலராசா

மேலும் பல புலமைப்பரிசில்களைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர் மற்றும் அனைத்து ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

க.விஜேசுந்தரம் (பெரியப்பா - இத்தாலி).

(67538)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பொதுச்சபை உறுப்பினர்
மு. கிருபாகரனின் அன்புத் தாயார்

### திருமதி அன்னம்மா முருகையா

காலமாகிய செய்தி அறிந்து துயரமடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

மாவைக்கந்தன் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

(67543)

## SPOKEN ENGLISH

Spoken English CDகள், சிறுபிள்ளைகளுக்கான Learning English VCDகள், Learn to Speak English (Soft ware) CDகள் விற்பனைக்குண்டு.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(67418)

## தேவை

அனுபவமுள்ள தமிழ் தட்டச்சாளர் தேவை.
தொடர்பு: க.சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணி,
உரும்பிராய் (பி.ப. 3-6 மணிவரை)

(67430)

## BIT Classes - R.Kumaran B.Sc.

Semester - I, Semester - III, Semester -V
Guidance For Final Year Project/Dissertation
*Any modules in the syllabi can be guided perfectly*
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
TP:0776577359. (67362)

## தவறிவிட்டது

சில்லாலைக்கும் சங்கானைக்கும் இடையில் பா.ஜெராட் நிரஞ்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(67541)

## தலைமைத்துவமும் வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பான

## மூன்று நாள் பயிற்சிப்பட்டறை

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் ஒழுங்கமைக்கும் இளைஞர், யுவதிகளுக்கான மாபெரும் கலந்துரையாடல்.

இப் பயிற்சிப்பட்டறையானது பிரதேச ரீதியாக தங்களின் பிரதேசங்களில் நடைபெறும்.

கலந்துகொள்ள ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிவரங்களை 12.11.2007 ஆம் திகதிக்கு முன்னர் எமது பணியகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**வயதெல்லை 19 - 25**

**இக் கருத்தரங்கின் இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்படும்**

*தொடர்புகளுக்கு:*
சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்,
இல.08.குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.021 222 8131 (சி/54221)

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு, கலைமகள் வீதியில் 02 பரப்புக் காணியில் அமைந்துள்ள 04 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு:- த.சத்தியமூர்த்தி,
விநாயகர் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 222 3193, 077 6172092
(காலை 8.30 - மாலை 5 மணிவரை)
(67577)

## விற்பனைக்கு

மிக நல்ல நிலையிலுள்ள Cannon NP 1215 போட்டோப் பிரதி இயந்திரங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 222, K.K.S.Road, Jaffna.
T.P. 0773867790.

* சகலவிதமான போட்டோப் பிரதி இயந்திரங்களுக்குமான ரோனர் வகைகள், உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ளலாம். (67580)

## கோழி இறைச்சி விற்பனை

புறொயிலர், ஊர்ச்சேவல்கள் என்பன மிக மலிவான விலைகளில் சுத்தம் செய்து எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: மல்ரிபாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
(67563)

## இறைச்சிக்கோழி விற்பனை

தரமான புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
(Electronic நிறுவை)
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை,நல்லூர்.
(67400)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 1973.05.07, 5'8" புனர்பூசம் 2, செவ்வாய் தோஷமற்றவர், 23 ¾ பாவம், சிங்கப்பூரில் Hospitality Management Diploma (American Hotel and Lodging Educational Institue) சித்தியடைந்தவர் பட்டப்படிப்பிற்காக வெளிநாடு செல்லவிருக்கும் மகனுக்கு, பெற்றோர் கனடா, ஐரோப்பா,USA, ஆஸ்திரேலியா, நியூசிலண்ட் குடியுரிமையுள்ள அழகான, நற்குணமுள்ள மணமகளை விரும்புகின்றனர்.

**தொடர்பு:- 011 2623502** (சி/54209)

## தீபாவளி விசேட மலிவு விற்பனை

VCD, MP3 ரூபா 70/=
VCD திரைப்படங்கள் ரூபா 100/=
DVD திரைப்படங்கள், பாடல்கள் ரூபா 150/=

**கவிதாஸ் சி.டி சென்ரர்**
இல 127/12, ஜூபிலி பஜார்
(சீமாட்டி கீழ்ப்புறம்)
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 4590579. (67536)

## சிறந்த தொழில் வாய்ப்பின் மூலம் ஒளிமயமான எதிர்காலம்

கடந்த நிதியாண்டில் மகத்தான சாதனைகளைப் புரிந்து, காப்புறுதி உலகில் வெற்றிக்கொடி நாட்டிய HNB அஷ்சூரன்ஸ் (இலங்கையின் மிகப்பெரும் தனியார் வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கியின் உப நிறுவனம்) சகிதம் உங்கள் தொழில் நிலையை முன்னேற்றி ஒளிமயமான எதிர்காலத்தில் பிரவேசிக்க இப்பொழுது சிறந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

**காப்புறுதி ஆலோசகர்கள்**

யாழ்ப்பாணம் பிராந்திய காப்புறுதி நிலையத்திற்கு தேவைப்படுகிறார்கள்

1) காப்புறுதி ஆலோசகர்கள் - ஆயுள் காப்புறுதி
2) காப்புறுதி ஆலோசகர்கள் - பொது காப்புறுதி

**தகைமைகள்:** க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், சிங்களம் அல்லது ஆங்கிலமொழி, கணிதம் என்பன உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

காப்புறுதித் திட்டங்கள் குறித்து தெளிவான விளக்கம் அளிக்கக் கூடிய வகையில் சிறந்த தொடர்பாடல் திறமையைக் கொண்டிருக்க வேண்டும். 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தராதரங்களின் அடிப்படையில் நடத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

**பயிற்சி:** தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு விரிவான பயிற்சியும் தொழிலறிவை விருத்தி செய்து கொள்வதற்கான கைநூல்கள் முதலியனவும் வழங்கப்படும்.

**உங்கள் தொழில்**

* காப்புறுதி செய்ய விரும்புபவருடன் உரையாடி அவரது தேவைக்கும் வசதிக்கும் உகந்த ஆயுள் காப்புறுதித் திட்டத்தைத் தெரிவு செய்ய உதவுதல்.
* அவரது ஏனைய காப்புறுதித் தேவைகள் (வீடு, வியாபாரம், தொழிற்சாலை, வாகனம்) மற்றும் ஊழியர் நட்டஈடு வசதிகள் என்பன குறித்து ஆலோசனை வழங்குதல்.
* தொழிலறிவை இடைவிடாது விருத்தி செய்வதுடன் வாடிக்கையாளருடன் நம்பகமான நல்லுறவைக் கட்டியெழுப்புதல்.

**உங்களுக்குக்கிடைக்கும் நன்மை**

* கவர்ச்சியான மாதச் சம்பளம், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் முதலியன.
* சரியான காப்புறுதித் திட்டத்தைப் பெற்றுக்கொடுப்பதன் சமூகத்திற்குச் சேவையாற்றும் வாய்ப்பு.
* திறமையை வெளிப்படுத்தி, காப்புறுதி ஆலோசகர்களின் அணிக்குத் தலைமை தாங்கும் நிலையை அடையும் வாய்ப்பு.

1) அணித்தலைவர்கள் - ஆயுள் காப்புறுதி
2) அணித்தலைவர்கள் - பொது காப்புறுதி
3) வெளிக்கள முகாமையாளர்கள் - ஆயுள் காப்புறுதி
4) வெளிக்கள முகாமையாளர்கள் - பொது காப்புறுதி

* மேற்குறிப்பிட்ட அதே தகைமைகளுடன், காப்புறுதிச் சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம் அவசியம்.
* சந்தைப்படுத்தல் அணிக்குத் தலைமை தாங்கும் ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் கொண்டிருக்க வேண்டும்.

உங்கள் பூரண விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை அடுத்த 10 தினங்களுக்கு, கீழ்காணும் முகவரிக்குப் பதிவு தபால் மூலம் அனுப்பவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

Regional Manager,
Regional Office,
HNB Assurance,
62,64, Stanley Rd, Jaffna.

HNB ASSURANCE

(சி/54191)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2008 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2008.01.01 தொடக்கம் 2008.12.31 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| இல. | சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர) | மாத வாடகை (வற்வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 01. | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) | 1000.00 | 10000.00 | 3200000.00 | - |
| 02. | உடுவில் கீளிச் சந்தையும் மல்வம் ஆலடிச்சந்தையும் | 500.00 | 2000.00 | 85000.00 | - |
| 03. | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 750.00 | 5000.00 | 750000.00 | 250.00 |
| 04. | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 150000.00 | 250.00 |
| 05. | கருவாட்டுக்கடை இல. 03 | 500.00 | 2000.00 | 25000.00 | 150.00 |
| 06. | கருவாட்டுக்கடை இல. 04 | 500.00 | 2000.00 | 20000.00 | 150.00 |
| 07. | கருவாட்டுக்கடை இல. 05 | 500.00 | 2000.00 | 20000.00 | 150.00 |
| 08. | கோழிக்கடை இல. 06 | 500.00 | 2000.00 | 50000.00 | 150.00 |
| 09. | கோழிக்கடை இல. 07 | 500.00 | 2000.00 | 40000.00 | 150.00 |
| 10. | கோழி உரித்தல் | 500.00 | 2000.00 | 40000.00 | 150.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 01. | மருதனார்மடம் சந்தை (துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) | 1000.00 | 10000.00 | 3000000.00 | - |
| 02. | இணுவில் பொதுச்சந்தை மல்வம் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 40000.00 | - |
| 03. | (கோத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படவேண்டும்) | 500.00 | 3000.00 | 150000.00 | - |
| 04. | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கோல்களத்தில் ஆடுகள் வெட்டப்படவேண்டும்) | 500.00 | 2000.00 | 50000.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 01. | ஏழாலை பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 15000.00 | - |
| 02. | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 85000.00 | - |

01. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 2007.11.15.பி.ப 2 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் : 2007.11.16. நண்பகல் 12 மணி வரை
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் : 2007.11.16.பி.ப. 2.30 மணிக்கு
04. கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளைச் செயலாளர், வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய **உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்** என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
07. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர்வரி செலுத்தப்படல் வேண்டும்.
08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. குத்தகை சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**
**[illegible]2007.**

(சி/54211)

**திருமதி ச.சொக்கலிங்கம்**
செயலாளர்,
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"மனமாற்றம்" சிறுகதையை எழுதியவர் மறுமலர்ச்சி காலத்து எழுத்தாளர்களில் ஒருவரான மு.பெரியதம்பி ஆவார்.
இவர் "மறுமலர்ச்சி" சஞ்சிகையில் ஐந்துக்கும் மேற்பட்ட கதைகளை எழுதி அந்தச் சஞ்சிகை உருவாக்கிய இரண்டு எழுத்தாளர்களில் ஒருவராகக் கணிக்கப்படுபவர். அக்கால கட்டத்தில் சிறப்பான சிறுகதை ஆசிரியராக விளங்கியவர். ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படக்கூடியவர். இவர் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். புலோலியைச் சேர்ந்தவர்.

# மனமாற்றம்

"பெண் படித்தவள், அழகானவள், நாகரிகமானவள், நிரம்பச் சீதனமுண்டு" என்று அவர் கூறினார். அதைக்கேட்டு அவன் இரை கிடையாமல் அவஸ்தைப்பட்ட நரி உயரத்திலே கிடந்த திராட்சைக்குலையைக் கண்டு வாயூறியது போல அங்கலாய்த்தான். தனக்குச் சீதனம் பிரதானமல்ல. அழகும் நாகரீகமும் இருந்துவிட்டாலே பொதுமென்று முருகேசு எண்ணியிருந்தான். சீதனமுங் கிடைத்தால் யார் வேண்டாமென்று சொல்லுவார்கள்! அவனுக்கு ஒரே ஆனந்தம்.

இந்த கல்யாணம் தப்பிவிட்டால் அவன் பாடு அதோ கதிதான். வேறு யார் அவனுக்கு மணம் பேசுவது? தாய், தந்தையர் வள்ளியம்மையை முடித்தாற் சரி, அல்லது அவளுக்கு எங்கேயாவது கல்யாணம் ஆகும்வரை உனக்கு வேறு பெண்ணைக் கட்டித்தர முடியாது என்று கூறிவிட்டார்கள். வள்ளியம்மை அவனது மைத்துனி. அந்தப் பெயரைக் கேட்கவே முருகேசுவுக்கு மிக வெறுப்பாயிருந்தது. லீலா, நீலா, புஸ்பம், ராணி என்றெல்லாம் இரண்டு, மூன்று எழுத்தில் அழகான பெயர்கள் இருக்கும் போது இதென்ன பெயர்! 'அம்மை'யைத் தள்ளி விட்டுச் சுருக்கமாக அழைத்தால், 'வள்ளி' என்றுதான் அழைக்க வேண்டும். அவனுக்கு ஒரே அருவருப்பாக இருந்தது.

படிப்புக் குறைவு. அழகும் மட்டம். நாகரிகமே அறியாத பட்டிக்காட்டுப் பெண். அவளைக் கல்யாணம் முடித்துப் பட்டினத்துக்கு அழைத்துச் சென்றால் அங்கே கதிரையில் உட்கார்ந்து கொள்ளவே அவளுக்குத் தெரியாது. ஆடவர்களைக் கண்டால் ஓடி ஒளிந்து விடக்கூடும். 'நித்திய பிரம்மச்சாரியாக இருந்து வாழ்க்கையை அனுபவியாது இறந்து விட்டாலும் காரியமில்லை; அந்த வள்ளியம்மையை மட்டும் மணப்பது இல்லை' என்று அவன் தீர்மானித்துவிட்டான். பட்டணத்திலே அரைக்குக் கீழே இறங்கியதும் இறங்காததுமான சட்டை அணிந்து பள்ளிக்கூடப் பெண்கள் இரட்டைப் பின்னலைச் சிலுப்பி மாறிமாறித் தோள்மீது எறிந்து நடக்கும் காட்சியைப் பார்த்துப் பார்த்து அவன் நன்கு நயத்திருக் கிறான். நடுமார்பை மாத்திரம் மறைத்துத் தாவணியணியும் நாரீமணிகள் உயர்ந்த குதிச்செருப்பிலே சறுக்கிச் செல்வதைக் கண்டு மனதைப் பறிகொடுத்து, 'இதுதானோ அந்த அன்னநடை' என்று இன்னுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறான். இந்தக் காட்சிகளையெல்லாம் கண்ட கண்ணுக்கு வள்ளியம்மை பொலிவாக இருக்கவில்லை. உலகிலே இப்படியாக மினுக்கித் தளுக்கி ஒயிலாய் நடக்கும் சிங்காரிகள் எத்தனையோ பேரிருக்க அவன் இந்த வள்ளியம்மையையா மணந்து கொள்ள வேண்டும்!

இத்தனைக்கெல்லாம் அவன் ஏதோ பிரபு வீட்டுச் சுகுமாரனல்ல. நாகரீகத்திலே பிறந்து நாகரீகத்திலே சுழியோடி முக்குளித்தவனல்ல. அசல் நாட்டவன். பட்டிக்காட்டுத் தாய்க்கும் தந்தைக்கும் புத்திரனாகப் பூமிப்பிரவேசஞ் செய்தவன். பாவம், அப்படியாகப் பிறந்ததற்காக இன்று அவனுக்கிருக்கும் மனவருத் தம்! அது அவனுக்கும் அவனைப் படைத்த அந்த ஆண்டவனுக்குந்தான் தெரியும். தந்தை இன்னமும் அந்தச் செம்பாட்டுக்காவி ஊன்றித் தடித்த நாலுமுழ வேட்டியை முழங்காலுக்கு மேலே கட்டிக்கொண்டிருந்தார். பறட்டைத் தலை; மயிர் நிரம்பிய பொலிவற்ற முகம்; வெய்யிலிலே காய்ந்து கறுத்த மேனி; இவை இன்னுமின்னும் பெருகினவேயன்றிக் குறைந்தபாடில்லை.

"அம்மா, நீ குறுக்கே கட்டுவதை நிறுத்திவிட்டு இனிமேல் இறவுக்கையும் மாறாடியும் போடம்மா" என்று சொல்லிப் பார்த்தான். "இதுவரையுமில்லையாம். இந்தக் கிழட்டுக்கு இனி ஏனடா அதெல்லாம்" என்று அவள் மறுத்துவிட்டாள். இந்தப் பட்டிக்காட்டுச் சவங்களைத் தன் தோழர் கண்டுவிட்டால் தன் கௌரவத்திற்கு இழுக்கு வந்துவிடும் என்று அஞ்சியதால் நண்பர்களை அவன் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதில்லை.

அவன் முதல்முதல் கொழும்பிற்குச் சென்ற போது நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் இப்போது மறந்துவிட்டான். 'யாழ்ப்பாணத்தில் இருந்து எப்போ வந்தது' என்று சிங்கள வாலிபர்கள் ஆங்கிலத்திலே கேட்டு நகைத்தார்கள். கண்டால் தெரியாதா கம்பளி ஆட்டு மயிரை! அசல் நாட்டவன் என்று அப்படியே தெரிந்தது. சப்பாத்துக்காலை இழுத்திழுத்து நடந்தபோது நண்பர்கள் செய்த ஏளனந் தாங்காது ஒரே ஒரு நாள் மாத்திரம் அழுதிருக்கிறான்.

அதெல்லாம் இப்போது அவன் நினைவில் இல்லை. அவன் பெரிய நகரவாசி. நாகரிகம் நன்றாகப் பிடிபட்டுவிட்டது. அப்பட்டணவாசி முருகேசுவுக்கு இந்தப் பெரியவர் பேசிய பெண், வாழ்க்கைத் துணைவியாக வந்துவிட்டால் பட்டிக்காட்டிலிருந்து விலகி முற்றாகவே நாகரிக உலகில் திளைத்து விடுவான். ஆம், அவன் மனம் அப்படித்தான் எண்ணியது.

இப்படி அழகான நாகரிகமான பெண்ணை மணம் பேசிய பெரியவரைக் கண்டு ஆரம்பத்திலே அவன் வெறுப்புக் கொண்டான். அவருடைய தோற்றம் தந்தையின் தோற்றம் போல நாட்டுப்புற மாதிரியிலே இருந்தது. இப்பொழுது நாட்டவரைக் கண்டால் அவனுக்கு ஒரே வெறுப்பு. ஆனால் அதைப் பெரியவர் கவனியாதது போல் அவனோடு பேச்சுக் கொடுத்தார். அவர் ஆரம்பத்தில் 'தம்பி, இது வெய்யிலல்ல, நெருப்பு' என்று அகோரமான வெயிலை விஷயமாக எடுத்துக் கொண்டார்.

அவன் பதில் கூறாது வேறெங்கோ புலனைச் செலுத்தியிருப்பவன் போலப் பாசாங்கு செய்தான்.

"என்ன தம்பி, நான் சொல்லுவது சரியில்லையா?"

பதில் இல்லை.

"ஏன் உமக்கு இந்த வெய்யில் குளிருகிறதா?"

இப்பொழுதும் பதிலில்லை.

பெரியவர் இலேசானவரல்ல. இவன் முந்த நாட் பிறந்தவன். இவனா அவரை அசட்டை செய்வது! அவருக்கு இவனையும் தெரியும், இவன் அப்பனையும் தெரியும்.

"அது உம்முடைய குற்றமில்லைத் தம்பி..."

இந்த வார்த்தைகளைக் கேட்டு மெல்ல அவரை நோக்கினான். ஆனால் அதற்கிடையில் அவர் கூறி முடித்துவிட்டார்:

"...பருவக்கோளாறு, வெய்யில் குளிரும்; நிலவு சுடும்; அது இந்தப் பருவத்தின் இயல்பு."

அசடு வழிய அவரை நோக்கினான்.

"ஆமாம். அப்படித்தான்" என்று இன்னும் வலியுறுத்தினார். ஒரு கன்னத்தில் அடி விழுந்த அதிர்ச்சி நீங்குவதற்கிடையில் மறு கன்னத்திலும் அடி விழுந்தது போல இருந்தது அவனுக்கு.

"நீங்கள் கூறுவதைக் கவனிக்கவில்லை. மேலே இருந்த குருவியைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டேன்" என்று சமாளிக்க முயன்றான். குரல் தளர்வாக இருந்தது.

"குருவியிலே மனதைப் பறிகொடுக்கக்கூடிய பருவந்தான்" என்றார் குமாரர்.

இன்னுமின்னும் அவர் வார்த்தைகள் அவனைத் தாக்கி அதிர்ச்சி அடையும்படி செய்தன.

இது அந்தப் பெரியவர் குமாரருடைய இயல்பான சுபாவம். தலைக்கிறுக்குப் பிடித்த பேர்வழிகளை முதலில் தன் வாய்ச் சாதுரியத்தால் மடக்கிவிடுவார். பின்பு இயல்பாகவே பேசிக் காரியம் பார்ப்பார். அல்லாவிட்டால் அவருக்கு வெற்றி கிட்டுவது அசாத்தியம்.

குமாரர் கீழிறங்கிப் பதமையாகப் பேசினார். முருகேசுவுக்கு நெஞ்சிலே சிறிது சிறிதாகத் தண்ணீர் வந்தது. அவனுடைய ஊர், பெயர், தொழில் இவற்றைப் பற்றி விசாரித்தார்.

அவனுடைய ஊரிலே இருக்கின்ற பெரிய மனிதர்களின் பெயர்களைக் கூறி அவர்களெல்லாம் தமக்குச் சிநேகிதம் என்றார். தம்முடைய மருமகனும் கிளாக் உத்தியோகத்தில் இருப்பதாகக் கூறிப் பெருமை கொண்டார்.

பேசிக் கொண்டிருக்கும்போது குமாரர் அவன் கையில் மோதிரம் இருக்கிறதா என்று பார்த்தார்.. 'நீ கல்யாணமானவனா? என்று கேட்கலாமோ என்றும் யோசித்தார். ஆனால் அப்படிக் கேட்கக் கூடாது' என்று அவர் மனம் கூறியது.

எதற்காக மூளையைப் போட்டு உடைக்க வேண்டும். வெற்றிலைப் பை இருக்கிறதே. அதை வெளியே எடுத்தார். தானும் வெற்றிலையைப் போட்டுக் கொண்டு அவனையும் போடும்படி நீட்டினார்.

"நான் போடுவதில்லை" என்றான்.

"ஒருநாளும்..."

"இல்லை"

"அப்படியானால் இன்னும் உமக்கு கல்யாணமாகவில்லையா?"

"இல்லை" என்றான். 'இன்னும்' என்றபோது அவர் சிறிது அழுத்தமாக உச்சரித்தார். அந்த அழுத்தம் அவன் நெஞ்சிலும் சென்று அழுத்தியது. அப்போது அவன் முகமிருண்டது. ஆனால் அதைக் கண்டு குமாரர் முகம் மலர்ந்த காட்சி அவனிடமிருந்த முகமலர்ச்சியும் இவரிடமே தான் வந்துவிட்டதோ என்று எண்ணும்படியாக இருந்தது. அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். புன்முறுவலை வெளித் தோன்றவிடாது அடக்கி விட்டார்.

"நீர் விவாகம் செய்த ஆள் என்று எண்ணினேன்" என்றார். அவன் துக்கம் இன்னும் அதிகரித்து விட்டது. அது பெற்றோர் மீது ஆத்திரமாக மாறியது. இதுகால வரையில் அவனுடைய உத்தியோகத்திற்கும் கௌரவத்திற்கும் தக்கதாக ஒரு பெண்ணை முடித்துக் கொடுக்கவில்லையே! 'வள்ளியம்மையாம் வள்ளியம்மை! அந்தச் சவத்தை யாருக்கு வேணும்? அம்மானுக்கு முன்கூட்டி முடிவு சொல்லிவிட்டால்... யாரைக் கேட்டுச் சொன்னார்கள்? எனக்கா அவர்களுக்கா கல்யாணம்? என்னைக் கேளாது முடிவு சொல்ல இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?' இவற்றை யோசிக்கும்போது அவனுக்கு ஒரே சினமாக இருந்தது.

குமாரர் மெல்லக் குறுக்கு விசாரணையில் இறங்கினார்.

"நீர் ஏன் இன்னும் விவாகம் செய்யவில்லை?"

பதில் கூற அவனால் முடியவில்லை.

"கடனிருக்கிறதா?"

"இல்லை"

"கரை சேராத குமர்...?"

"இல்லை"

இல்லை இல்லை என்று கூறுகிறானேயன்றிக் காரணத்தைக் கூறவில்லையே!

"உமக்கு விருப்பமற்ற இடத்தில் மச்சாள் கிச்சாள்."

"ஓ. அந்தத் தொல்லைதான்" என்று ஓய்ந்த குரலில் கூறினான் முருகேசன்

"இது பெரிய அநியாயந்தான்" என்றார் குமாரர். தொடர்ந்து "அவனவன் விருப்பத்திற்கு மணக்கவிட வேண்டும். பெற்றார் இதிலே தலையிடுவது தவறு" என்றார்.

அப்போது அவன் நோக்கிய நோக்கு 'முற்றுஞ் சரி' என்று கூறுவது போல இருந்தது.

"நான் அவளை முடிக்கப் போவதில்லை" என்றான் அவன்.

"ஏன் அழகில்லையா? பணமில்லையா?... நீர் விரும்பாததற்கு காரணம் என்ன?"

"அழகும் பணமும்! சுத்தப் பட்டிக்காடு."

"அவனவன் உத்தியோகத்திற்குத் தக்கதாக நாகரிகமான பெண் வேண்டும். நீர் சொல்வது நியாயமே" என்றார் குமாரர்.

"நான் இறந்தாலும் அவளை முடிக்கப் போவதில்லை" என்றான் அவன். "அப்படியானால் விவாகஞ் செய்யாமலிருக்கப் போகிறீரா?"

"ஏதோ பார்ப்போம்."

"சரி தம்பி, நான் உமக்கு ஒரு கல்யாணம் பேசட்டுமா?" என்று குமாரர் கேட்டார். அவர் கேட்ட தொனியில் அவன் நிலைமைக்கு இரங்கிப் பரோபகார சிந்தையுடன் அதை ஒழுங்கு செய்து கொடுக்க முயல்வதாகவே தோன்றியது.

அவன் யோசித்தான்.

"ஏன் யோசிக்கிறீர்? உமது கஷ்டத்தைப் பார்த்துத்தான் கூறுகிறேன். இங்கிலீஷ் நிரம்பப் படித்த பெண். அழகானவள். உமக்காகத்தான் ஒழுங்கு செய்வதாகக் கூறினேன். விரும்பாவிட்டால் விடும். எனக்கென்ன?"

'வேண்டாம்' என்று கூற அவன் மனம் துணியவில்லை. எப்படித் துணியும்? அவர் மேலும் கூறினார்; பெற்றாருக்கு ஒரே பெண். இப்பொழுது காசாகப் பதினையாயிரம் கொடுப்பார்கள். சொத்து வேறே. மீதி ஏதாவது இருந்தால் அதுவும் அவளுக்குத்தான்!"

"யாருடைய மகள்?" என்று அலட்சியமாகக் கேட்டான்.

"மாலீயூர்ச் சரவணமுத்தருடைய பெண். அவளை முடிக்கப் பலர் விரும்புகிறார்கள்.

(தொடர்ச்சி 08 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதி உபகாரம் கருதாமல் செய்யும் உதவிக்கு நிகரானது உலகத்தில் வேறு எதுவுமே இல்லை!



குந்தி வயிற்றில் சூரியனுக்குப் புதல்வனாகப் பிறந்தவன் கர்ணன். விதியின் பயனாக, பெற்ற தாயினால் ஆற்றில் ஒரு பேழையுள் வைத்துவிடப்பட்டான். திருதராட்டிரனுடைய தேர்ப்பாகன் அப்பிள்ளையைக் கண்டெடுத்து அன்பாக வளர்த்து வந்தான். கர்ணன் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கியதேயன்றி விற்போர், வாட் போர், குதிரையேற்றம், யானையேற்றம் இவற்றிலும் திறம் பெற்றுச் சிறந்த போர் வீரனாகவும் விளங்கினான்.

திருதராட்டிரன் புதல்வர்களுள் முதல்வனாகிய துரியோதனன் கர்ணனோடு நெருங்கிய நண்பனாயினான். திருதராட்டிரன் புதல்வர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையில் நடந்த ஆயுதப் பயிற்சிப் பரீட்சையில் அருச்சுனன் சிறந்து விளங்கினான். அதைக் கண்ட துரியோதனன் அதிகப் பொறாமை கொண்டான். அச்சமயம் கர்ணன் அங்கே சென்றான். அருச்சுனனைப் பார்த்து 'அருச்சுனா, நீ செய்து காட்டிய வித்தைகளுக்கு மேலாக நான் செய்து காட்டுகிறேன், பார்' என்றான்.

அது கேட்ட துரியோதனன் மிக்க மகிழ்வெய்தினான். உடனே கர்ணனைக் கட்டித் தழுவி, அது முதற்கொண்டு அவனை நண்பனாகக் கொண்டான். "என்னையும் என் பொருளையும் நீ இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாம்" என்றான். கர்ணன், "அரச குமாரனே, நான் அருச்சுனனுடன் யுத்தம் செய்து என் திறமையைக் காட்டவே வந்தேன். நீ என்மீது காட்டிய பிரியத்துக்கு என்றும் நன்றியுள்ளவனாய் வாழ்வேன்" என்றான்.

அச்சமயம் கிருபாசாரியார் கர்ணனைப் பார்த்து, "அருச்சுனன் பாண்டு புத்திரன்; நீ எந்த இராச குலத்தைச் சேர்ந்தவன்? அரசரோடன்றிக் குலமும் குலாசாரமும் அறியப்படாதவனோடு இராச குமாரர்கள் சமயுத்தம் செய்யமாட்டார்கள்" என்றார். அது கேட்ட கர்ணன் வெட்கமடைந்து வாய்திறவாது ஒரு பக்கத்தே ஒதுங்கி நின்றான். உடனே துரியோதனன் சினத்து மறுப்பு நியாயங் கூறிக் கர்ணனை அங்கதேசத்துக்கு அரசனாக்கினான். கர்ணன் துரியோதனன் செய்த அந்நன்றியை என்றும் மறவாதவனாக இருந்தான்.

இவ்வாறு கர்ணன் துரியோதனனுக்கு உற்ற நண்பனாக இருந்துவந்தான். பின்னர் பல வருடங்கள் கழிய, பாண்டவர்களுக்கும் துரியோதனாதியர்க்கும் பாரத யுத்தம் ஆரம்பித்தது. கர்ணன் தனது மகனே என அறிந்த குந்தி பாண்டவரும் கர்ணனும் பாரத யுத்தத்தில் இறவாமலிருக்க வேண்டுமென்ற விருப்பினால், கர்ணனிடம் சென்றாள். தானே கர்ணன் தாய் என்றும், பாண்டவர் கர்ணன் தம்பி என்றும் அவனுக்குக் கூறினாள். கர்ணன் பாண்டவர் பக்கம் சேர்வதனால் இராச்சியம் முழுவதற்கும் பேரரசனாய் விளங்கலாம் எனக் கூறினாள். ஆனால் கர்ணன் அதற்கு உடன்படாதவனாய்த் தாயைப் பார்த்து "திருதராஷ்டிரன் புத்திரர்களால் யான் எல்லாச் சுகமும், சொத்தும், மதிப்பும், மரியாதையும் இதுவரையில் எய்தி அனுபவித்த பின், யுத்தம் வந்த இப்போது பாண்டவர்களுடன் சேரச் சொல்கிறாய். வில் வித்தை அரங்கேற்றுகையில் அருச்சுனன் எதிரில் என்னை இழித்துரைக்க நேர்ந்த போது, துரியோதனன் என்னை அங்கநாட்டரசனாக்கி மரியாதை செய்தா னல்லவா? அந்த நன்றிக்கு இந்த இராச்சியத்தையேயன்றி மூன்று உலகங்களையுமே கொடுப்பினும் ஈடாகுமா?" என்று கூறி மறுத்துவிட்டான். குந்தி மனம் வருந்திச் சென்றாள்.

யுத்தம் தொடங்கி நடைபெறுங் காலத்தில் பத்தாம் நாள் யுத்தத்தில் பீஷ்மர் விழ்ந்தார். கர்ணன் பீஷ்மரிடம் சென்றான். பீஷ்மர் கர்ணனைப் பார்த்து "கொடையும் வீரமும் பொருந்திய வீரனே, நீ உனது சகோதரர்களாகிய பாண்டவரைப் பகைத்தல் தகுதியன்று. அவர்களைச் சிநேகிப்பதே தருமம்" என்றார். அது கேட்ட கர்ணன் "பிதா மகரே, நான் குந்தி புத்திரன் என்பதை அறிவேன். ஆனால் துரியோதனனது நன்றிகளைப் பெற்று வாழ்ந்தயான் அவனுக்குச் செஞ்சோற்றுக்கடன் தீர்க்குங் கடப்பாடுடையேன். அதனால் அவனை விட்டு நீங்கி அவனது விரோதிகளின் பக்கம் சேர்வது பெரும் பாதகம்; இயலாத காரியம்" என்றான். இவ்வாறு கர்ணன் துரியோதனன் பக்கத்தில் நின்று போர் செய்து மாண்டான்.

உதவி செய்தாரை மறவாது அவர் செய்த நன்மையைப் போற்றுவது சிறந்த கடனாகும். அரசசபையில் கர்ணன் இழித்துரைக்கப்பட்டபோது துரியோதனன் அவனுக்குச் செய்த நன்றியை அவன் என்றும் மறந்தானில்லை. பூமி முழுவதற்கும் தான் அரசனாகும் பாக்கியத்தைப் பெறலாம் என்று அறிந்தகாலையிம் அதனைச் சிறிதும் விரும்பாதவனாய் நன்றி செய்த துரியோதனனுக்குத் துணையாகப் பொருதுதன் உயிரையும் விட்டான்.

ஒருவன் தான் முன் ஓர் உதவியும் செய்யாமலிருக்கவும் தனக்கு ஒருவர் ஒருவித காரணமுமில்லாமலே மனமுவந்து செய்த உதவிக்கு நிகராகத் தான் அவருக்குச் செய்யத்தக்க கைம்மாறு இல்லை; மண்ணுலகம் விண்ணுலம் இரண்டையும் பதிலாகக் கொடுத்தாலும் அவை அவ்வுதவிக்கு ஈடு ஆகா. அறிவுடையார் தினையளவு உதவியைப் பெற்றாலும் அதைப் பனையளவாகக் கொள்வார்கள். எவ்வாறான செய்ந்நன்றியையும் மறந்தவர்க்கு அப்பாவத்தினின்று உய்யும் வழிஇல்லை.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள்)

என்றார் வள்ளுவரும். இவருக்கு இப்போது நாம் உதவினால், பின்னுக்கு இவரால் நமக்கு இன்ன கைம்மாறு கிடைக்கும் என்று கருதாமல் (ஒருவிதமான பிரதியுபகாரத்தையும் எதிர்பாராமல்) செய்யும் உதவியின் நயம் கடலினும் பெரியது. தன் உயிருக்கு ஆபத்தான பேரிடர் நேர்ந்த காலத்தில் தனக்கு ஒருவர் செய்த உதவி பொருளின் அளவாற் சிறிதாயினும், அக்காலத்தை நோக்குமிடத்து அது பூவுலகத்தினும் பெரியதாகிய உதவியாகும்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனி னும் ஞாலத்தின் மாணப் பெரிது" (குறள்:102)

(நன்றி - இளமையில் உணர்ச்சி வளம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமாற்றம்....

(07 பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் நான் உமக்குச் செய்து தந்தால் நல்லது என்று எண்ணுகிறேன். நீர் கஷ்டப்படுகிறீர். நல்லவராயுமிருக்கிறீர்."

சிறிது சிறிதாக அவன் முகம் மலர்ச்சியடைந்து வந்தபோதிலும் தன் விருப்பத்தை இன்னும் வெளிப்படையாகக் கூறவில்லை.

"தம்பி , நீர் யோசிக்க வேண்டாம் . ஏதோ அந்தப் பெண் உமக்குக் கிடைப்பதாக இருந்தால் உமது பூர்வ புண்ணியந்தான். வயலின் கூட வாசிப்பாள். வாய்ப்பாட்டு - அது கேட்க வேண்டியதில்லை. தங்கக் கிளியாட்டம். பார்த்துக்கொண்டேயிருந்தாலே பசி தீர்ந்துவிடும்."

அவனுடைய முகமலர்ச்சியைக் கொண்டே அவன் விரும்புகிறான் என்பதை அவர் அறிந்து கொண்டார்.

"பெண்ணின் பெயர் என்ன?" என்று அவன் கேட்டான். ஏதாவது வள்ளியம்மை கிள்ளியம்மையாக இருந்தால்...! இந்தப் பெயரிலேயே எவ்வளவோ இருக்கிறதாம்!

"சீதாலக்ஷ்மி" என்று அவர் சொன்னார்.

'சீதா என்று அழைக்கும்போது என்ன அழகாகவிருக்கும்! இதைச் செய்து கொண்டால் நல்லதுதான்' என்ற முடிவிற்கு வந்துவிட்டான் முருகேசு. இதை விட்டுவிட்டு வேறென்ன செய்வான்? கண்ணடித்துக் காதல் கொண்டு கடிதமெழுதிக் கண்ணியிலே படவைக்கும் தந்திரத்தைக் கூடக் கையாண்டு பார்த்திருக்கிறான். அந்த வித்தையிலே வல்லவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்தான். ஆனால், அதிலே முருகேசுவுக்குச் சிறிதும் வெற்றி கிடைக்கவில்லை. அவமானம் நேர்ந்ததும் உண்டு. தானாகவே தனக்கொரு பெண்ணைத் தேடிக் கொள்ளுஞ் சக்தியும் தனக்கில்லை என்பதை அறிந்து விட்டான். குமாரர் பேசுமிந்த விவாகத்தையும் நழுவவிட்டால் பின்பு அதோ கதிதான்.

"ஏன் தம்பி, விருப்பமா, இல்லையா? இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லும்" என்று கேட்டார் குமாரர்.

"விரும்பாமலென்ன?..." என்று அவன் கூறினான், கூறிய தொனியில் ஏதோ மனக்கஷ்டம் இருப்பதாகத் தெரிந்தது.

தாய் தகப்பனுக்குத் தெரியாமல் எங்கேயாவது மணஞ் செய்வது என்று தீர்மானித்த போதிலும், இப்போது அப்படியான ஒரு வசதி வந்தபோது இதுகாலவரை இருந்த தீர்மானம் தளர்ந்துவிட்டது. பெற்றார் அறியாமல் தன் எண்ணப்படி எங்கேயாவது முடிப்பது பெரிய தவறு போலத் தோன்றிற்று. யோசித்தான்....

"என்ன? ஒளியாமற் சொல்லும். உமக்கிருக்கும் கஷ்டம் என்ன?" என்று குமாரர் கேட்டார்.

அவன் மனதிலுள்ளதைக் கூறினான்.

"இதெல்லாம் எனக்குப் பெரிய காரியமல்ல. அவர்கள் மனத்தைத் திருப்பி ஆனந்தமாக இந்தக் கல்யாணத்தை முடித்துத் தருவேன்.... இதெல்லாம்எனக்குப் பெரிய காரியமல்ல."

அவர் நிமிர்ந்திருந்து இதைக் கூறினார். அவருக்கு அத்துணை திறமையுண்டு என்பதனையும் முருகேசு நம்பினான். அவனுடைய முகத்தில் மெல்ல மகிழ்ச்சிக்குறி தோன்றியது. அதைக் குமாரர் நன்கு கவனித்தார்.

"ஆனால் ஒரு விஷயம். அப்படி அவர்கள் மனதைத் திருப்பி இதை ஒழுங்கு செய்வதாக இருந்தால், இது இரண்டொரு நாளில் முடியக் கூடிய விஷயமல்ல. பல நாட் செல்லும். அதனால் என் தொழில் துறை கெட்டுவிடக் கூடும்.' என்றவர் மேலும் சொன்னார்: "தம்பி நான் சொல்வது விளங்கிறதா? எனக்கு அதனால் வரக்கூடிய நஷ்டத்தை நீர் சரிக்கட்ட வேண்டும்.... குறைந்தது இருநூற்றைம்பதாவது தர வேண்டியிருக்கும்"

முருகேசுவுக்கு நெஞ்சிலே ஈட்டிகொண்டு தாக்கியது போல இருந்தது. இருநூற்றைம்பதென்றால் கொஞ்ச நஞ்சமா? அதனால் அவன் திகைப்படைந்தான். இந்தக் கல்யாணமே வேண்டாமென்றாற் பிழையில்லைப்போல இருந்தது. ஆனால் இதை விட்டால் அவனுக்கு வேறு கதியில்லையே! ஒரே கல்யாணப் பயித்தியத்தில் மூழ்கியிருக்கிறான். எப்படி அங்ஙனம் கூற மனம் வரும்?

"தொகை அதிகமாயிருக்கு" என்றான்.

"நான் பிள்ளை குட்டிக்காரன். என் தொழிலை விட்டு மினைக்கட வேணும். இருநூற்றைம்பது தந்தாலும் போதாது. ஏதோ உமக்காக இப்படி ஒப்புக் கொள்கிறேன்" என்று அவர் இடம் வையாது பேசினார்.

அவன் "நூற்றைம்பது தரலாம்" என்றான். நூறு கேட்க என்று விரும்பியவன் பயத்தினால் நூற்றைம்பது என்றான்.

"இல்லைத் தம்பி எனக்குக் கட்டாது."

"இல்லை, அது போதும் பாருங்கோ..."

அதிக நேரம் விவாதித்தனர். தனித்தனி ஒவ்வொருவரும் தமக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைக் கூறினர். இறுதியிலே இருநூறுக்கு இருவரும் சம்மதித்தனர்.

"சரி, உம்முடைய வீட்டிற்கு எப்போது வர?" என்று குமாரர் கேட்டார்.

"நாளைக்கே வாருங்கோ. நான் விரைவிலே பயணம் போக வேண்டும்" என்றான்.

"சரி, நாளைக்குச் சரியாகப் பத்து மணிக்கு உம்முடைய வீட்டில் நிற்பேன். நீர் அங்கே காத்திருக்க வேண்டும்... எல்லாம் வெற்றியாகும். இதெல்லாம் எனக்குப் பெரிய காரியமல்ல."

அவன் பத்து மணிக்கு அங்கே காத்து நிற்பதாகக் கூறினான்.

"சரி, தம்பி! நான் போய் வருகிறேன்."

"நல்லது."

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர். மறுபடியும் "சரி, தம்பி நான் வாறேன்" என்றார் குமாரர்.

"வாருங்கோ" என்றான் அவனும்.

ஆனால் அவர் போவதாகக் காணவில்லை.

அவன் ஆச்சரியப்பட்டான். அதற்கிடையில் "நீர் பெண்ணைப் பார்க்க வேண்டாமா?" என்று மறுபடி தொடங்கினார்.

"முதலில் வீட்டுக்கு வாருங்கோ. அதெல்லாம் ஆறுதலாகப் பார்ப்போம்" என்றான் அவன். பெண்ணைப் பார்க்க அவனுக்கும் விருப்பம் தான். என்றாலும் அப்போது அப்படிச் சொன்னான்.

சிறிது நேரம் தயங்கிநின்றுவிட்டு, "தம்பி கையில காசிருந்தால் இருபத்தைந்து ரூபா தாரும். பின் அந்த இருநூறிலே கழித்து விடுகிறேன்" என்றார். அவனேன் அங்கே இருபத்தைந்து ரூபா கொண்டு வருகிறான்? "பத்து ரூபா மாத்திரம் இருக்கிறது" என்றான்.

"சரி, அதையாவது தாரும்" என்றார்.

அவன் 'மணிபாய்'க்கை வெளியே எடுத்தான். அப்போது ஒரு வாலிபன் பைசிக்கிள் வண்டியில் அங்கே வந்து இறங்கினான்.

குமாரர் ஏதோ கூற உன்னுவதற்கிடையில் "உம்மிடம்தான் போய் வருகிறேன்" என்றான் மிடுக்காக அந்த வாலிபன்.

"ஏன், என்ன விசேஷம்?"

"எனக்கு அந்தப் பெண் வேண்டியதில்லை. நீர் சரியான ஏமாற்றுக்காரன்" என்றான் வாலிபன்.

முருகேசுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"என்ன நீர் சொல்வது விளங்கவில்லை. அவசரப்படாமற் சொல்லும்" என்றார் குமாரர்.

"நீர் நேற்றுக் காட்டிய பெண்தானா மணவறைக்கு வரும்?"

"வேறென்ன!"

"சரி இருக்கட்டும். அந்தப் பெண் எனக்கு வேண்டியதில்லை. மரியாதையாகப் பணத்தைக் கொடுத்து விடும்"

"ஏன்? எதற்காக?"

"என்னை ஏமாற்றி விட்டீர். நீர் பேசிய பெண் வேறு; நேற்றுக் காட்டிய பெண் வேறு"

உடனே குமாரர் மிகவும் கோபத்தோடு சொன்னார்: "எந்த மடையன் சொன்னான்? நான் அப்படியான அயோக்கியன் என்றா எண்ணுகிறீர், நீர்! விளங்காமற் பேசுகிறீர்"

"இல்லை, நான் விளங்கித்தான் பேசுகின்றேன்"

இருவரும் பலமாகப் பேசினர். கோபமும் மிஞ்சிக் கொண்டிருந்தது. நிலைமையைச் சமாளிப்பதற்காக முருகேசு இடையே குறுக்கிட்போது அந்த வாலிபன் சொன்னான்: "இவர் எனக்கு ஒரு கல்யாணம் பேசினார் பாரும். நேற்றுப் பெண் பார்க்கப் போனோம். ஒரு அழகான பெண்ணைக் காட்டினார். ஆனால், மணவறையில் வேறொரு மூளிப் பெண் வரும்"

"பொய்" என்றார் குமாரர்.

"உமக்கெப்படித் தெரியும்?" என்று வாலிபனிடம் முருகேசு கேட்டான்.

"பேசின பெண்ணைத்தான் நான் காட்டினேன் தம்பி" என்று குமாரர் குறுக்கிட்டுக் கூறினார்.

"இல்லை. அந்த வீட்டிலே மூன்று பெண்கள்..." என்று அந்த வாலிபன் ஆரம்பித்தான்.

குமாரர் அவனைச் சொல்ல விடாது தான் குறுக்கிட்டு "யார் சொன்னான்? நீர் சரியான புரட்டுக்காரனாயிருக்கு" என்றார்.

"யார் புரட்டுக்காரன், நானா? நீரா?"என்று கூறியபடி கைச்சட்டையைச் சுருக்கிக் கொண்டு அவரை நோக்கிப் பாயத் தயாரானான் அவன். முருகேசு அவனைப் பிடித்துக் கொண்டு "பெரியவர், கொஞ்சம் பொறுங்கோ! அவர் தன் நியாயத்தைக் கூறட்டும். பிறகு நீங்கள் சொல்லலாம்" என்றான்.

அந்த வாலிபன் மீண்டும் கூறினான்: பாரும் மிஸ்டர்! அந்த வீட்டிலே மூன்று பெண். முதல் இரு பெண்களும் அழகில்லை. எத்தனையோ இடங்களில் மணம் பேசியும் எல்லோரும் மறுத்து விட்டார்கள். இறுதியில் இவர் ஒரு சூழ்ச்சி செய்தார். மூத்த பெண் என்று கூறி மூன்றாவது பெண்ணைக் காட்டி, மூத்த பெண்ணைக் 'கட்டி அடித்து' விட்டார். நம்பி மோசம் போன அந்த மாப்பிள்ளை நாலு நாளிலே கோபித்துக் கொண்டு வெளியேறி விட்டான். அவன்தான் இந்த இரகசியத்தை என்னிடம் கூறினான். எனக்கு இரண்டாவது பெண்ணைப் பேசினார். ஆனால், காட்டப்பட்டது அந்த மூன்றாவது பெண்ணாம். இந்த லட்சணத்தில் என்னிடம் பெற்றாருக்கு இவள் ஒரேயொரு மகள் தான் என்றும் சொல்லியிருக்கிறார்."

இவன் இதைக் கூறிக்கொண்டிருக்கும் போது குமாரர் இடையிடையே குறுக்கிட்டு, "பொய்", "புரட்டு", "சுத்தப்பொய்" என்றெல்லாம் மறுத்துக் கொண்டிருந்தார். விஷயத்தைக் கேட்டு முடித்த முருகேசு, ஒரேயொரு பெண் என்று அவன் கூறிய வார்த்தையைக் கேட்டதும், "யாருடைய மகள்?" என்றான்.

"மாலீயூர்ச் சரவணமுத்தருடைய மகளோ, யாரோவாம்!" என்றான் வாலிபன்.

முருகேசு ஆச்சரியப்பட்டான்.

"அந்தப் பெண் வேறு. உமக்குப் பேசியது வேறு" என்று குமாரர் அவசரமாகக் கூறினார்.

"சரவணமுத்தருடைய மகளைத்தானே எனக்கு இப்பொழுது பேசினீர்" என்று முருகேசு கேட்டான்.

"எனக்கும் உமக்கும் என்றா எண்ணுகிறீர்? அகப்பட்ட இடமெல்லாம் வலைவீச வேண்டியதுதான். ஏதோ ஒன்று அகப்படும் என்பது அவருக்குத் தெரியும்!" என்று வந்தவன் கூறினான்.

குமாரர் நிலத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தார். "என்னுடைய காசு தருகிறீரா, என்ன?" என்று அந்த வாலிபன் முறைப்பாகக் கேட்டான்.

"உமக்குக் காட்டிய பெண்ணை முடித்துத் தந்தாற் சரிதானே!" என்று தயவாகக் கூறினார் குமாரர்.

"நீர் எங்கே சுழித்து விடுகிறீரோ! அதை யார் கண்டது? அந்தப் பெண்ணும் வேண்டாம். வேறு பெண்ணும் வேண்டாம். பணத்தைத் தந்துவிடும்."

அப்போது றோட்டிலே பஸ் வண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது.

"நான் இப்போது யாழ்ப்பாணம் போகிறேன். வீட்டிற்கு வாரும் தருகிறேன்" என்று கூறிக் கொண்டு எழுந்தார் தரகர். கிட்ட வந்த பஸ் யாரையோ இறக்குவதற்காக சிறிது தாமதித்தது. தருணத்தைத் தவறவிடாது ஓடிப்போய் ஏறிக்கொண்டார் குமாரர்.

பஸ் வண்டி போய்விட்டது. ஏமாந்த வாலிபர் இருவரும் என்ன செய்வது என்று தெரியாது விழித்துக் கொண்டு நின்றார்கள். அந்த வாலிபன் பற்களைக் கடித்தான். அதற்குமேல் வேறென்ன செய்ய முடியும் அவனால்?

சிறிது மௌனம்.

"சரியான ஆசாமி!" என்றான் அவன்.

"நல்ல காலம் தருணத்திலே நீர் வந்தது. அல்லாவிட்டால் நான் நிச்சயமாக அணாப்பப் பட்டிருப்பேன்..... சீ! இதென்ன உலகம், எங்கே போனாலும் அணாப்பு!" என்றான் முருகேசு.

"ஒரு நாளும் தரகர்மாரை நம்பக் கூடாது" என்று ஒரு அனுபவ சித்தாந்தம் மற்றவனிடமிருந்து எழுந்தது.

"நீர் எவ்வளவு பணம் கொடுத்தீர்" என்று முருகேசு கேட்டான்.

"அதையேன் கேட்கிறீர்! ஐம்பது ரூபா மண்ணாய்ப் போச்சு!" என்றான் அவன்.

இன்னும் சிறிது நேரம் அந்த அனுபவமற்ற வாலிபர் இருவரும் தங்களுக்கு இதிலே கிடைத்த அனுபவத்தைப் பற்றிப் பேசினார்கள். இறுதியிலே இருவரும் பிரிந்து சென்றார்கள். சுடலை ஞானம் வெளித்த முதியவர்களின் மனநிலையிலேயே அப்போது அவர்கள் மனநிலையும் இருந்தது. தரகர்மாரை நம்பினால் வாழ்க்கை முழுவதுமே திண்டாட வேண்டும் என்ற எண்ணம் உதயமாகிவிட்டது.

வழியிலே முருகேசுவின் மனம் இதைப் பற்றி நன்கு சிந்தித்தது. இந்தத் தரகர் வலையிலே சிக்கியிருந்தால் அவன் நிலைமை என்ன! அவன் பெற்றோர் மற்றும் உறவினர் கண்ணிலே விழிக்க முடியுமா?

வீட்டிலே சாப்பிட உட்கார்ந்தபோது தாய் வழமையான பல்லவியைத் தொடங்கினாள்.

"தம்பி, கொம்மான் இன்றைக்கும் வந்து போகிறார்..." என்றாள்.

வழமையிலே இந்த வார்த்தையை அவள் கூறினாள் அவன் சினப்பதுண்டு. இன்று மௌனமாக குனிந்தபடி சாப்பிட்டுக் கொண்டு இருப்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அந்தப் பெண் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க உன்னுடைய வாழ்க்கை ஒரு நாளும் உருப்படமாட்டாது' என்றாள் மறுபடியும்.

"அது சரி இப்ப அவளுக்கென்ன வயது போய் விட்டதா? பதினாலு வயதுதானே! எல்லாம் ஆறுதலாகச் செய்யலாம். கொஞ்ச நாளைக்கு போடிங்கில இருந்து படிக்கவிடச் சொல்லு. தையலும் பழகி விடுவாள். பழக்கமும் திருந்தி விடும்" என்றான்.

தாய்க்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை.

"வாற கிழமை போடிங்கில விடுகிறதென்றுதான் கொம்மான் எண்ணிக் கொண்டிருக்கிறார்" என்றாள் அவள்.

'அவ'ளுடைய பெயரை எப்படி மாற்றி வைக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டே ஆறுதலாகச் சாப்பிட்டான் முருகேசு. ❋


## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்களை யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

| கொழும்பு - யாழ். | SUB DEALERS | யாழ். - கொழும்பு |
|---|---|---|
| 1Kg 250/= | தேவை | 1Kg 200/= |

**EURO GROUP OF COMPANIES**

35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998, 0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06.
TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD.
TEL: 0212223974, 0774207963 (C54198)



**United Nations Development Programme**
**Sustainable human development**

UN DP

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

**VACANCY ANNOUNCEMENT**

To implement UNDP initiatives in collaboration with the Government of Sri Lanka, we invite applications from qualified Sri Lankan Nationals for the following positions at UNDP Transition Programme.

**FIELD ASSISTANT** — **DUTY STATION: JAFFNA**

Under the overall supervision of the Field Coordinator, the incumbent will:

- Conduct periodic monitoring of implementing partners, suggesting corrective measures to be undertaken, when necessary.
- Provide technical assistance and necessary support to implementing partners including assistance to develop tools and systems for project planning and implementation.
- Provide technical assistance to institutions and beneficiaries supported directly or indirectly by the Transition Programme.
- Assist the Transition Programme team in preparation of technical documents such as drawings, bills of quantities and tender documents.
- Ensure lessons learned and best practices are incorporated into formulation and implementation of sub-projects.
- Prepare and ensure the timely submission of monitoring and evaluation reports.
- Monitor the technical aspects of infrastructure projects.
- Contribute to knowledge networks and communities of practice.
- Perform any other duties as required.

Educational Background:
- Minimum G.C.E. (Advanced Level) is required. National Certificate in Technology (NCT-civil), National Diploma in Technology (NDT-civil), Civil Engineering or related qualification is highly desirable.

Experience:
- 3 years relevant work experience is highly desirable.

Language Requirements:
- Good knowledge of English, and Tamil and/or Sinhala.

Operational skills:
- Experience in using relevant computer software packages.
- Ability to work as a member of a multi-disciplinary and multi-cultural team.
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment.
- Motivated, flexible and capable of working under pressure.
- Willingness to travel outside duty station.

UNDP offers an attractive compensation package commensurate with experience. This position is a non-career appointment for limited duration with possible extensions. Please send your curriculum vitae, with names of two non-related referees and contact telephone numbers to reach us by 12th November, 2007. Applications should be addressed to the Field Coordinator, 121, Temple road, Jaffna. Indicate position and Duty Station applied for on the top left hand corner of the envelope. UNDP will only be able to respond to those applicants in whom there is further interest. Qualified female candidates are encouraged to apply.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய நகரங்களில் பெருகும் இன்ரநெற்



இந்தியாவில் இணையப் பயன்பாடு குறித்த ஆய்வின் முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

* பெரும் நகரங்களைக் காட்டிலும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில்தான் இணையப் பயன்பாடு வேகமாக வளர்ந்து வருகிறது.

80 லட்சம் பேர் மின்னஞ் சலுக்காக (E - Mail) இணையத்தைப் பார்க்கின்றனர். 37 லட்சம் பேர் தகவலுக்காகத் தேடுகின்றனர்.

* தகவல் தேடுபவர்களில் 60 வீதம் பேர் பொதுவான தகவலைத் தேடுகின்றனர். கல்வி சார்ந்த தகவல்களை 45 வீதம் பேர் தேடுகின்றனர். 27 வீதம் வேலைவாய்ப்பினைத் தேடுகின்றனர். 17 வீதம் பொழுதுபோக்கு செய்திகளை நாடுகின்றனர். 4 வீதம் திருமணத்திற்கான தகவல்களைத் தேடுகையில் 8 வீதம் ஜோஸ்யம் குறித்து தேடுகின்றனர்.

* ஒரு மாதத்தில் இரண்டு அல்லது மூன்று முறை இணையத்தை நாடுபவர்களின் எண்ணிக்கை 2000 ஆம்ஆண்டில் ஒரு லட் சத்திற்கும் குறைவாக இருந்தது. தற்போது அது 18.7 லட்சமாக உயர்ந்து தொடர்ந்து அதிகமாகிக்கொண்டும் உள்ளது.

# அணுகுண்டு வீசிய விமானி மரணம்



ஜப்பானில் அணுகுண்டு போட்டு உலகத்தை அதிர வைத்த விமானி கடந்த புதன்கிழமை மரணமானார்.

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் அணுகுண்டு வீசப்பட்டது. உலகத்தையே இது உலுக்கிவிட்டது. ஜப்பான், ஹிரோஷிமாவுக்கு அணுகுண்டை எடுத்துச் சென்ற விமானம் பி. 29 ரக லிட்டில்போய். இந்த விமானத்தில் இருந்து வீசப்பட்ட அணுகுண்டு, ஒரு லட்சம் பேரின் உயிரைக் குடித்தது. ஹிரோஷிமாவில் புல் முளைக்காத அளவு சேதத்தை ஏற்படுத்தியது. இந்த விமானத்தை இயக்கிய விமானியின் பெயர் கமாண்டர் போல் டிபட்ஸ். இவர் 92 ஆவது வயதில் மரணமடைந்தார். உடலை அடக்கம் செய்யக்கூடாது. தனக்கு நினைவிடம் அமையக்கூடாது என்பவை தான் டிபட்சின் கடைசி ஆசை.

# காது கேளாதோருக்கான மொபைல்



கொரியாவின் 'பான்ரெக்' நிறுவனம் கேட்கும் சக்தி குறைவாக உள்ளவர்களுக்கான கைத் தொலைபேசி ஒன்றை உருவாக்கி உள்ளது. ஏ-1407 என்ற எண்ணுடன் வந்துள்ள இந்த தொலைபேசியில் ஒலி அலைகளைக் கேட்பவரின் உள் காதுகளுக்கு எடுத்துச் செல்லும் தொழில் நுட்பம் உள்ளது. இதனால் அதிக சத்தம் உள்ள இடங்களில் பேசுபவரின் ஒலி தெளிவாகவும் துல்லியமாகவும் கேட்கலாம். 1.3 மெகாபிக்ஸெல் கமரா, 2.4 உள் வண்ணத்திரை, 96X 64 பிக்ஸெல் வெளி முகப்பு மைக்ரோ எஸ்.டி.கார்ட்ஸ்லாட் என்ற பிற வசதிகளும் உள்ளன. தற்போது கொரியாவிலும் ஜப்பானிலும் விற்பனையாகும் இந்த தொலைபேசி விரைவில் இந்தியாவிலும் கிடைக்கலாம். விலை அப்போது தெரியவரும்.

# பலதும்-பத்தும்

## டென்மார்க் ரயில் வண்டிகளில் இணையம்



டென்மார்க்கில் உள்ள நீண்டதூர ரயில்வண்டிகளில் பயணிப்போருடைய வசதிக்காக ரயில்வண்டிகளில் இணைய வசதி செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முடிவிற்குள் முக்கிய விரைவு வண்டி கள் யாவும் இணைய இணைப்புக்களுடன் பயணிக்க ஆரம்பிக்கும்.

இதில் ஓர் அங்கமாகவும், பரீட்சார்த்த முயற்சியாகவும் இம்மாதம் முதல் கொப்பன்கேகன் - கொசூயர் நகரங்களுக்கிடையே ஓடும் ரயில் வண்டிகளில் இணையம் செய்யப்பட்டுள்ளது. டென்மார்க் ரி.டி.சி தொலைத் தொடர்பு நிறுவனமும் டென்மார்க் டி.எஸ்.பி போக்குவரத்து சபையும் இணைந்து இந்த முயற்சியில் குதித்துள்ளன. முன்னதாக ஜேர்மனியில் உள்ள ரொலிகொம், ரி சிஸ்ரம் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்பட இருந்த பணி இப்போது டி.எஸ்.பி. மூலம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## சூரிய ஒளியைக் கட்டுப்படுத்தும் கிறீமில் புற்றுநோய் அபாயம்!




கோடை காலம் வந்தால் சூரிய ஒளியை கட்டுப்படுத்தி தெறிப்படையச் செய்ய பலர் சூரியஒளி கட்டுப்பாட்டு கிறீம்களை பாவிப்பதுண்டு. இந்த கிறீம்களில் 'நனோ பேற்றிக்குலர்' என்ற ஒருவகை இரசாயனக் கலவை இருந்தால் அத்தகைய கிறீம்களினால் தோல் புற்றுநோய் ஏற்படக்கூடிய ஆபத்திருப்பதாகச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாம் உடலில் பூசும் வாசனைத் திரவியங்களில் இந்தவகை இரசாயனக் கலவைகள் இருந்தால் அவற்றால் பாதிப்பு உண்டாகும், என்பதால் ஐரோப்பிய ஒன்றியம் இது குறித்த ஆய்வுகளை முடுக்கிவிட்டுள்ளது. உடலில் உள்ள பரம்பரை மூலகங்களை அழிக்கும் இந்த இரசாயனம் உள்ள கிறீம்கள் விற்பனைத் தடையை சந்திக்கும் அபாயம் நிலவுகிறது.

# குடாநாட்டைப் பசுமையாக்குவதற்கு எல்லோரிடமும் விசேட அக்கறை தேவை

## 'மில்க் வைற்' கனகராசாவுக்குப் பின்னர் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் பசுமைப்புரட்சியாளர் செகராஜசிங்கம்



விடாக்கண்டன்
வை. செகராஜசிங்கம்

செவ்வி: ரமேஸ்

கடந்த 40 வருடங்களாக தனது அரச சேவைக் காலத்திலும், பின்னர் இளைப்பாறிய காலத்திலும் மரங்களை தாமே வளர்த்துப் பேணி வழங்கும் பொதுச் சேவையாகக் கொண்ட இளவாலையூர் பசுமைப்புரட்சியாளர் வை. செகராஜசிங்கம் (வயது 83) மில்க்வைற் தொழிலதிபர் கலாநிதி க. கனகராசா விட்டுச்சென்ற சேவைகளில் ஒன்றை மிகவும் வினைத் திறனான முறையில் -

யாழ். குடாநாட்டின் வளர்ச்சியின் அபிவிருத்தி நோக்கிலும், பசுமை பேண் நோக்கிலும் முன்னெடுத்துச் செல்வர். 'இளவாலை முள்ளானையைச் சேர்ந்தப் பசுமைப் புரட்சியாளர் வைத்திலிங்கம் செகராஜசிங்கம்.

ஆரம்பக் கல்வியை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும் பின்னர் இளவாலை புனித ஹென்றியரசர் பாடசாலையிலும் மட்டக்களப்பு சென்றி. மைக்கல் பாடசாலையிலும் கற்ற இவர் ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் புலமைத் தேர்ச்சி பெற்றவர்.

ஆரம்பத்தில் ஆசிரியராகவும் பின்னர் வாழைச்சேனையில் உதவி நெல் கொள்வனவு அதிகாரியாகவும் கடமையாற்றியவர்.

பின்னர் லண்டன் போக்குவரத்து ஆணையக நிறுவனத்தில் (London - Institute of Transport) 5 வருடம் போக்குவரத்து தொடர்பான உயர்படிப்பை பெற்று 'ஏ.எம்.ஐ.ரி.' (A.M.I.T - London) சான்றிதழ் பெற்று -

இலங்கை ரயில்வே திணைக்களத்தில் ரயில் நிலைய அதிபராக நியமனம் பெற்று வேகக் கட்டுப்பாட்டு அதிகாரியாக (Trains Controller) மருதானை, அநுராதபுரம் பகுதிகளிலும் பின்னர் காங்கேசன் துறையில் 'சுப்றாதர' ரயில்வே அதிகாரியாகவும் கடமையாற்றி 36 வருட சேவையின் பின்னர் இளைப்பாறியவர்.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக வடக்கு -கிழக்கிலும் யாழ். மாவட்டத்திலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும், யாழ். மாவட்டத்திலும் தாம் சேவையாற்றுகின்ற இடங்களிலும் மரக்கன்றுகளை நாட்டி சாதனை படைத்தவர் இவர்.

அவருடன் நடத்திய உரையாடலில் இருந்து சில பகுதிகள்:

* அரசாங்க சேவை காலத்தில் செய்த சேவைகள் பற்றிக் கூறுங்கள்?

அநுராதபுரத்தில் ரயில் அதிவேக கட்டுப்பாட்டு அலுவலராக கடமையாற்றிய வேளையில் மிக நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பயன்தரு மரங்களையும், பூமரக்கன்றுகளையும் வளர்த்துப் பராமரித்து ரயில் நிலையத்தை அழகுற வைத்திருப்பதுடன் அங்குள்ளவர்களுக்கு மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி உற்சாகப்படுத்தினேன்.

அன்றைய காலங்களில் லண்டன் மகாராணி யார் எலிசபெத் அநுராதபுரத்திற்கு வருகை தந்து ரயில் நிலைய அழகைப் பார்த்து மெய்ச்சினார். அத்துடன் தனியொருவனான எனது சேவையையும் பாராட்டிச் சென்றார்.

பின்னர் சாவகச்சேரி, செட்டிக்குளம் பகுதிகளில் ரயில்வே நிலைய அதிபராக பணி புரிந்தபோது அங்குள்ள மேடைகளில், 'தா-வரம்' என்ற பாபாவின் நாமத்தினை வேண்டி தாவரங்கள் நடுவதற்கான ஆர்வம் எனக்கு ஏற்பட்டது.

* ரயில் நிலையத்தில் இவ்வாறு நீங் கள் செய்த சேவை எவ்வாறு இனம் காணப் பட்டது?

பலதரப்பினராலும் இனங்காணப்பட்டு பரிசில்களும், சான்றிதழ்களும், விருதுகளும் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி, செட்டிக்குளம், அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் கடமையாற்றிய காலங் களில் ரயில் நிலையத்தை அழகுபடுத்துவதற்காகவும் புதிய மரங்களை நவீன தொழில்நுட்பத்தின் கீழ் சாடிகளில் வைத்து அழகு படுத்தியதற்காகவும் முதற் பரிசு (Aword) வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை என்னால் மறக்க முடியாது.

இக்காலப்பகுதியில் வெளிநாடுகளில் இருந்து புதிய பப்பாசி இனங்கள் என்னால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் சகல மாவட்டங்களிலும் பயன்படுத்தப்பட்டது.

* யாழ். மாவட்டத்தில் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கி ஊக்குவிக்க என்ன காரணம்?

யாழ். குடாநாடு பல்வேறு அசாதாரண சூழ்நிலைகளினால் பாதிப்படைந்து வருகின்றது. மரங்கள் தான்தோற்றித்தனமாக அழிக்கப்பட்டு பாலைவனமாக மாறிவிட்டது.

*13,000 மரக்கன்றுகளுக்கு மேல் விநியோகம்*

பாலைவனமான இந்தக் குடாநாடு சோலைவனமாக மாறவேண்டும் என்பது எனது வேணவா.

இதற்காக நான் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக 13 ஆயிரம் மரக்கன்றுகளுக்குமேல் (மா, பலா, தேசி, தோடை, இலுப்பை, விளாத்தி, நெல்லி, சவுக்கு, சமண்டலை, தேக்கு, மகோக்கனி மற்றும் பயன்தரு மரங்கள் என) எனது சொந்த செலவில் உற்பத்தி செய்து பல இடங்களிலும் இலவசமாக விநியோகித்துள்ளேன்.

எனது பாரியார் ராஜேஸ்வரி அவர்களின் உதவியுடன் இப்பாரிய திட்டத்தை என்னால் முன்னகர்த்த முடிந்தது. இப்போது இத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

*முழு அளவில் ஈடுபட்டேன்*

* யாழ். மாவட்ட ச.ச. நிலையங்களின் சமாசத் தலைவராக இருந்துள்ளீர்கள் அது பற்றி?

குடாநாட்டில் மரங்களை நட்டு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டவர்களில் முன்னாள் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலாவும் ஒருவர்.

அதற்கு ஒத்திசைவாக செயற்பட்ட யாழ். அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் அவர்களது காலத்தில் குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகள் ஊடாகவும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. தரிசு நிலங்களில் பனைமரங்கள், பயன் தரு மரங்களும் நாட்டப்பட்டன.

* பகவான் சத்தியசாயி பாபாவின் பிறந்த தினத்தன்று மரக்கன்றுகள் வழங்கி உதவுவது பற்றி?

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகப் பயன்தரு மரங்களை வளர்த்தெடுத்து பகவானின் அவதார தினத்தன்று வழங்கி வருகின்றேன்.

அதன் மூலம் எனக்கு ஆத்ம திருப்தி உண்டாகிறது. 'உனக்கு நீ உண்மையானவனாக இரு' (To Thine OwnSelf be) என்ற வாக்கிற்கு இணங்கவும் மெய்யாக உணர்ந்து செயற்படுகின்றேன்.

*மில்க் வைற் கனகராசா பாராட்டினார்*

பகவான் சத்தியசாயி நிறுவனத்தின் வட பிராந்திய இணைப்புக் குழுச் செயலாளராக இருந்த காலத்தில் (2003-2005) முழுமையாக மரவிநியோகத்தில் என்னை அர்ப்பணித்துச் செயற்பட்டுள்ளேன்.

* மரவிநியோகம் உங்களை எந்தளவிற்கு ஆற்றுப்படுத்தியுள்ளது?

எனது பசுமைப்புரட்சி சேவையைப் பாராட்டி 'பசுமைப்புரட்சியாளர்', 'விடாக்கண்டன்' போன்ற பட்டங்கள் எனக்கு பகவான் அருளால் கிடைக்கப்பெற்றன.

மில்க்வைற் தொழில் அதிபர் கலாநிதி க. கனகராசா எனது சேவையைப் பாராட்டி மில்க் வைற் தொப்பி (Cap) தலையில் வைத்து பாராட்டியதுடன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளார்.

இந்து சமயப் பேரவை, சுதுமலை அம்பாள் ச.ச. நிலையம் என்பனவும் எனது சேவையைப் பாராட்டியுள்ளன.

* நீங்கள் கூறவிரும்புவது?

யாழ். குடாநாட்டில் எம்மால் மட்டுமன்றி ஏனைய அரச, தனியார் மற்றும் நலன்விரும்பிகளால் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

மரக்கன்றுகளைப் பெறுவோர் அதனை உரிய முறையில் பாதுகாத்து பயன்மிக்கதாக மாற்றி பொருளாதார வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் உரியதாக மாற்ற வேண்டும்.

மேலும் உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மற்றும் அரச அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள் என ஒவ்வொரு நிறுவனமும் பசுமையை உண்டாக்குவதில் விசேட கவனத்துடனும் தனித்துமாகச் செயற்பட்டால் 2015 இல் யாழ். குடாநாட்டை பசுமை தரும் பிரதேசமாக மாற்றலாம் என்பது எனது கருத்து.

*

## பரி. யோவான் கல்லூரியிலேயே...

அமரர் பேராயர் அதி. வண. டி.ஜே. அம்பலவாணர் எழுதி உதயதாரகை பத்திரிகையில் வெளியாகிய கட்டுரையின் தமிழாக்கம் 'உதயனில்' கடந்த 28ஆம் திகதி வெளியாகியிருந்தது. அக்கட்டுரையின் 5ஆம் பந்தியில், பாதுகாப்பு அரண்களுக்கு இரண்டு புறத்திலும் இருவேறு மையங்களில் விழாக்களை நடத்துவதே உத்தமம் என்று கருதப்பட்டது. 'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒன்று உடுவில் மகளிர் கல்லூரியில் ஒன்றுமாக'' என்று வரும் பகுதியில் 'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி' என்றிருப்பதை 'யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி' என்று திருத்தி வாசிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தின் யாழ்.கிளை செயற்பாட்டு முகாமையாளர் அ.சாம்சன் அவர்களின் அன்பு மாமன் பரமு முத்துக்குமாரசாமி அவர்களின் கால மானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்.**
**MICRO PC SYSTEMS (Pvt) Ltd** (67592)

## மரண அறிவித்தல்கள்

### சாமிநாதர் அக்கினேசம்மா



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதர் அக்கினேசம்மா நேற்று (03.11.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுவக்கீன்பிள்ளை சாமிநாதரின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, லூர்தம்மா ஆகியோரின் மூத்த சகோதரியும் ஞானமலர், றுக்மணி (உப தபாலதிபர், சில்லாலை), யோசவ்அன்ரன் (தபாலகம், பண்டத்தரிப்பு), மனோறதி, அருட்தந்தை ஜெயறஞ்சன் (சுண்டிக்குளி பங்குத்தந்தை) ஆகியோரின் அன்புத் தாயும் தங்கராசா (கோண்டாவில் டிப்போ), பெனிற்றா, விக்ரர்வில்லியம் (ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு) ஆகியோரின் மாமியும் நிலக்சன், நிருசன், ஜெறோசன், ஜெனோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிப் பணய நல்லடக்கத் திருப்பலி நாளை (05.11.2007) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*புனித செபஸ்தியார் வீதி, சில்லாலை.* (67492)
**அருட்தந்தை ஜெயறஞ்சன்** *(மகன்).*

### சின்னப்பொடி சண்முகம்



அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி சண்முகம் நேற்று (03.11.2007) சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் குணமணியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், சிறிதரன், விக்கினேஸ்வரன், மங்கையற்கரசி, விக்கினேஸ்வரி ஆகியோரின் தந்தையும் இளங்கோவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் அராலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*கருப்பிட்டிப் பிள்ளையார் கோயிலடி, அராலி தெற்கு.* (67595)
**மனைவி, பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சரவணபவன் (SARA)

**இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரவணபவன் அவர்கள் 31.10.2007 அன்று சென்னையில் காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற வை.கணபதிப்பிள்ளை (இராசா விதானையார்)- இரத்தினம்மா அவர்களின் அன்பு மகனும் திருமகளின் அன்புக் கணவரும் சாரங்கி, சயந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற திரு. திருமதி ஐயாத்துரை- புவனேஸ்வரி ஆகியோரின் மருமகனும், அன்னலட்சுமி, காலஞ்சென்ற நல்லையா (வரி மதிப்பாளர் உள்நாட்டு இறைவரித்திணைக்களம், கொழும்பு), அருந்தவமலர், சுசீலாதேவி, ஞானகலாராணி, சர்வானந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சாந்தன், உமையாள் மணிவண்ணன், காலஞ்சென்ற காசிநாதன், கமலாதேவி, சுப்பிரமணியசிவம், தர்மலிங்கம், சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.**

**ஈமக்கிரியைகள் இன்று (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பொறளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.**

No. 30, 4/4, Ridgeway Place,
Colombo - 04,
Tel : 2505381.
**குடும்பத்தினர்.**

## நிகழ்வுகள்

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு விழா எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் அருட்திரு. ஜெயக்குமார் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (275)

* * *

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபர ஏகாதசி நிகழ்வு இடம் பெறவுள்ளது.

அன்றையதினம் விசேட பூசை வழிபாடுகள், அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சுவாமி உள் வீதி வலம் வருதல் இடம்பெறும். (78)

## விற்பனைக்கு

H.H 15 - தொடர் இலக்கமுடைய பெட்டியுடன் 550 குபோட்டா லான்மாஸ்ரர் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **சி.துரைம்,**
மானிப்பாய் வீதி, தாவடி. (67600)

## தவறிவிட்டது

நுருசோ வீதி, கண்டுக்குளி தெற்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த தருமலிங்கம் சொரூபகுமார் என்பவரது தேசிய அ.அட்டை (853454613 V), விசேட அ.அட்டை என்பவை நேற்று (03.11.2007) சனிக்கிழமை கொக்குவில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ.தருமலிங்கம், K.K.S.வீதி, 3ஆம் கட்டை, இராசாமில் லேன், கொக்குவில் மேற்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், மின்சார உபகரணங்கள், குசினிப் பொருள்கள், அல்சேஷன் நாய், நாய்க்கூடு ஆகியன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**P.T.பாலன்,** *இல 45, சிவகுருநாதன் வீதி, யாழ்ப்பாணம்.* (67575)

## தவறிவிட்டன

01.11.2007 அன்று பயணிகள் பஸ்ஸில் பயணித்த சரவணபவன் ஜெயகாந்தன் என்பவருடைய பெறுமதிமிக்க பொருள்கள் அடங்கிய பிரீப்கேஸ் (அடையாளமாக சிவப்பு நிறம் கறுப்பு நிறம் கொண்டது) தவறிவிட்டன. தவறுதலாகக் கைமாறி எடுத்தவர்கள் தயவுசெய்து நல்லுள்ளம் கொண்டவர்கள் தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (சன்மானம் வழங்கப்படும்).

**தொடர்பு: 59, கஸ்தூரி வீதி, நிராவியடி, யாழ்ப்பாணம்.**
T.P.: 021 222 5448, 0776184513.
(67590)

## கண்ணீர் அஞ்சலி



*30.10.2007 அன்று கொழும்பில் இயற்கை மரணம் எய்திய துணாவில் மேற்கு, மணங்குணாய்ப்பிள்ளையார் ஆலய நிர்வாக சபைத் தலைவரும், தர்மகர்த்தாவுமாகிய*

**மாணிக்கம் றெங்கநாதன்**

*அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.*


மணங்குணாய்ப் பிள்ளையார் ஆலய நிர்வாக சபையினர். (67598)

## இடம் மாற்றம்

**514/2, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த மெடிக் குயிக் (Medi Quick) ஆய்வுகூடம் தற்போது ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மணிக்கூட்டு கோபுர வீதியில் (56, London Medick Building) இல் இயங்குகின்றது என்பதை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**

**சு.சுந்தரலிங்கம், இரத்தப் பரிசோதகர்.** (67574)

## கண்ணீர்க் காணிக்கை



எமது சக ஊழியர்
**நடேசலிங்கம் பாஸ்கரன்**
அவர்கள் 01.11.2007 அன்று அகாலமரணமடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

***சோபனா ஆடையகம்,*** *16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.* (67591)
**உரிமையாளரும் ஊழியர்களும்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 05 . 01 . 1935 |  | 15 . 11 . 2006 |

### அமரர் முருகர் நாகமணி

*திதி: தசமி- 04.11.2007*

**ஆண்டுகள் எத்தனை ஓடி மறைந்தாலும் எம் அன்புத் தெய்வத்தின் நினைவு எம்மை விட்டகலாது!**

*உங்கள் பிரிவால் வாடும்:*
கனேஸ்வரம் அளவெட்டி. (67589)
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து**

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


சிவஞானம் ராகவன் -166


தேவராசா துவாரகன்- 162


குணரட்ணம் அமுதா- 160


மோகலிங்கம் பகீரதி- 150


இராசநாயகம் வித்தியா-147

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

01. இரத்தினராசா ஜனகன்
02. சற்குணராசா விஜயதர்சன்
03. தேவராசா ரோமிலா
04. விக்கினேஸ்வரன் குருபரன்
05. தர்மலிங்கம் நாகரஞ்சன்
06. கிருஷ்ணபிள்ளை அஜித்குமார்
07. ஆறுமுகசாமி அபிராமி
08. மகேஸ்வரன் விநோபினி
09. கனகலிங்கம் வினோதன்

இன்று 04.11.2007 மு.ப. 9.30 மணிக்கு சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பழையமாணவர் சங்கத்தினரால் இவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். இவர்கள் அனைவரும் பல்கலைக்கழகம் சென்று, கலைகள் பலவும் கற்று, வாழ்வில் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், அளவெட்டி. (54231)
**பழைய மாணவர் சங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## தமிழ்ச்செல்வனைக் கொன்றொழித்து கொழும்பு அரசு சொல்லும் செய்தி

'உதயன்' உட்பட பல்வேறு ஊடகங்களின் ஆசிரிய தலையங்கங்களுக்கு மையப் பொருளாகும் அரசியல் கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், இப்போது தாமே ஆசிரிய தலையங்கத்துக்கு மையப் பொருளாகி இருக்கிறார்.

''தமிழ்ச்செல்வனின் படுகொலை அரசியல் தீர்வுக்கான சாத்தியத்தைப் படுகொலை செய்து குழிதோண்டிப் புதைத்திருக்கின்றது'' - என மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் கூறியிருக்கும் கருத்தே பல்வேறு அரசியல் பிரமுகர்களதும் அவதானிகளினதும் கருத்தாக இருக்கின்றது.

அவர் கூறுவதுபோல, இது நிச்சயமாகச் சமாதான முயற்சிகளுக்கு நேரடியாக விழுந்த பேரடி; பேரிடி.

''கடந்த வாரத்தில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் என்ற அரசியல் தீர்வு நடவடிக்கையை அரசு ஒத்திவைத்துள்ள பின்னணியிலேயே இந்தக் கொடூரத் தாக்குதலையும் நோக்கவேண்டும். இந்த அரசின் போலி அறிக்கைகளை நம்பிக்கொண்டிருந்தவர்கள் இன்று தாங்கள் உதிர்த்த வார்த்தைகளையே உண்ணவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது''.

''அரசு தனது போர் நிகழ்ச்சி நிரலில் மிகத் தெளிவாக இருக்கின்றது. இது சர்வதேச சமூகத்திற்குப் பொதுவாகவும் இந்திய அரசுக்குக் குறிப்பாகவும் விடுக்கப்பட்டுள்ள செய்தியாகும்'' - என்று மனோகணேசன் எம்.பி. தெரிவித்த கருத்துகள் கவனிக்கத்தக்கவை.

தமிழ்ச்செல்வன் மீதான படுகொலைத் தாக்குதலை அடுத்து அரசின் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதிக்கு அடுத்து பாதுகாப்பு விவகாரங்களில் அதிக அதிகாரம் உடையவரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ பகிரங்கப்படுத்திய கருத்து நிலைப்பாடு அரசின் உள்ளார்ந்த திட்டத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

''தாக்குதலில் தமிழ்ச்செல்வனைக் கொன்றதன்மூலம் புலிகளின் தலைமைக்குச் செய்தியொன்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. புலிகள் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவரும் எங்கிருக்கின்றார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும் என்ற செய்தியையும், நாம் நினைத்தால் அவர்கள் ஒவ்வொருவரையும் வரிசையாகத் தொலைத்துக் கட்டமுடியும் என்ற தகவலையும் இந்த நடவடிக்கை மூலம் நாம் புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம்'' - என்று பெருமிதப்புடன் கூறியிருக்கின்றார் கோத்தபாய.

'குருடன் பெண்டாட்டிக்கு அடித்தமை' போல குருட்டு அதிர்ஷ்டத்தில் தமிழ்ச்செல்வனும் அவரது உதவியாளர்களும் தங்கியிருந்த இடம்மீது இக் குண்டுகள் விழுந்தனவோ தெரியவில்லை. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பெருநிலப்பரப்பின்மீது இலங்கை வான்படை விமானங்கள் பலநூற்றுக் கணக்கில் நடத்திய தாக்குதல்களில் ஒன்றிலேயே தமிழ்ச்செல்வன் பலியாகியிருக்கின்றார். 'தமிழ்ச்செல்வன் செத்துவிட்டார், செத்துவிட்டார்' என்று சிங்கள ஊடகங்கள் பல வருடங்களாகப் பலதடவைகள் திரும்பத் திரும்ப செய்தி வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தி வந்த பின்னணியிலேயே இப்போது உண்மையாகவே தமிழ்ச்செல்வன் உயிரிழந்திருக்கின்றார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தமிழ்ச்செல்வனைச் சரியாக இலக்கு வைத்து சாதித்தார்களா என்பது வேறு விடயம்.

ஆனால் இந்தத் தாக்குதலை அடுத்து வெளியிட்ட அரசின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய, புலிகளின் ஒவ்வொரு தலைவர்களினதும் இடங்கள் தங்களுக்குத் தெரியும் என்றும், அந்த அடிப்படையிலேயே இத் தாக்குதலை நடத்தி புலிகளின் தலைமைக்குச் செய்தி அனுப்பியுள்ளோம் என்றும் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

ஆக, புலிகளின் பல்வேறு தலைவர்களின் இடங்கள் தெரிந்திருந்தும் முதலாவதாக புலிகளின் அரசியல் பொறுப்பாளரது தலையைத் தாங்கள் இலக்கு வைத்திருக்கிறார்கள் என்பதை அரசுத் தரப்பு ஒப்புக்கொண்டிருக்கிறது.

இக்காலகட்டத்தில் புலிகளும் சும்மா இருந்து விடவில்லை. இராணுவத் தளபதி, அவருக்கு அடுத்த நிலையிலிருந்த உயரதிகாரி, பாதுகாப்புச் செயலாளர் என்று புலிகளும் இலக்குவைத்தனர் என்பது வெளிப்படை. ஆனால் அவை எல்லாம் நேரடியாக இராணுவம் அல்லது படை சார்ந்த இலக்குகள். அரசியல் இலக்குகள் அல்ல.

தமிழ்ச்செல்வன் தமிழர் விடுதலை இராணுவத்தின் ஓர் அங்கம் என்றாலும் அவர் அரசியல்-பிரிவுப் பொறுப்பாளர், அமைதி முயற்சிகளில், சமாதானப் பேச்சுகளில், சமரச எத்தனங்களில் ஈடுபட்டவர். மிகத் தீவிரப் போக்கு மத்தியில் மிதப்போக்குக்கு இடமளித்தவர்.

புலிகளின் இராணுவத் தளபதியான பல தலைவர்கள், முக்கியஸ்தர்களின் இடங்கள் தெரிந்திருந்தும் தனது முதல் தாக்குதல் இலக்காகத் தமிழ்ச்செல்வனை - அமைதி முயற்சிகளில் ஈடுபடும் புலிகளின் பிரதிநிதியை - தேர்ந்தெடுத்து, இலக்கு வைத்து அளித்ததன் மூலம் அரசுத் தரப்பின் நிலைப்பாட்டை அரசு அப்பட்டமாக வெளிப்படுத்திவிட்டது என்பது துலாம்பரம்.

அரசியல் ரீதியாகப் பேச்சுகளில் ஈடுபட்ட தலைவர் - கிளிநொச்சியிலும் பிறநாடுகளிலும் வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்து அமைதி வழித் தீர்வு குறித்துக் கலந்துரையாடல்களை நடத்திவந்த தமிழர்களின் பிரதிநிதி - கொல்லப்பட்ட சம்பவத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கூறியமைபோல சிவிலியன்கள் மீதான இலக்கு வைத்த தாக்குதலாகவே கருதமுடியும்.

இதன் மூலம் அமைதி முயற்சிகளுக்கு சாவுமணி அடித்தாகிவிட்டது. அதன் விபரீத விளைவுகளை இலங்கை தேசம் இனி எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

தமிழ்ச்செல்வனை இலக்கு வைத்ததன் மூலம் அமைதி வழித் தீர்வில் தனக்கு உடன்பாடே இல்லை என்பதை சர்வதேசத்திற்கும் எடுத்துரைத்திருக்கின்றது கொழும்பு அரசு. சர்வதேசத்திற்கு இச் செய்தி புரியுமா என்பதே நமது கேள்வி.

## ஐந்து மாவீரர்களின் வித்துடல்கள் படை மரியாதையுடன் விதைப்பு

கிளிநொச்சி, நவ.4

இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சில் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் உயிரிழந்த ஐந்து மாவீரர்களின் உடல்கள் நேற்று படை மரியாதையுடன் விதை குழியில் விதைக்கப்பட்டன.



லெப்.கேணல் அலெக்ஸ், மேஜர் மிகுதன், மேஜர் கலையரசன், லெப். ஆட்சிவேல், லெப்.மாவைக்குமரன் ஆகியோரின் வித்துடல்கள் முன்னதாக மாவீரர்களின் இல்லங்களில் இருந்து முழுப் படை மரியாதையுடன் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் கிளிநொச்சி வட்டப் பொறுப்பாளர் சரவணன் தலைமையில் வீர வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

மாவீரர்களின் வித்துடல்களுக்கு விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான கேணல் பால்ராஜ், படையகத் தொடக்கப் பயிற்சிப் பள்ளிகளின் சிறப்புத் தளபதி கேணல் ஆதவன், வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி வேலவன், கட்டளைத் தளபதி ரமேஸ், கல்விக் கழக பொறுப்பாளர் இளங்குமரன், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே,பாலகுமாரன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் மற்றும் ஆயிரக் கணக்கான பொதுமக்களும் தமது இறுதி வணக்கத்தைத் செலுத்தினர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர்.

அதன் பின்னர் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஐந்து மாவீரர்களின் வித்துடல்கள் பிற்பகல் 2 மணிக்கு முழுப்படை மதிப்புடன் தூய விதை குழியில் விதைக்கப்பட்டன. (அ)

## ஆஸ்துமா குறித்த கருத்தரங்கு இன்று யாழ்.இந்துவில்

யாழ்ப்பாணம்,நவ.4

ஆஸ்துமா நோய் குறித்த மருத்துவக் கருத்தரங்கும் நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறையின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறுகிறது.

இந்த வகையில் ஆஸ்துமா பற்றிய மிக அடிப்படைத் தகவல்களை இது வரை பத்திரிகைகள் மூலம் அறிந்திருப்பீர்கள்.

ஆஸ்துமா பற்றிய முழுமையான தகவலைப்பெறவும் உங்களுடைய நோய் பற்றிய சந்தேகங்களை யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களிடம் தீர்த்துக்கொள்வதற்கும், இன்றைய இலவச மருத்துவக் கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.- என்று சமுதாய மருத்துவ துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**தமிழ்ச்செல்வன் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக**

## கறுப்புக் கொடிகளைக் கட்டி துக்கதினம் அனுஷ்டிக்க அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.4

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கறுப்புக் கொடிகளை கட்டி மூன்று தினங்கள் துக்கம் அனுஷ்டிக்குமாறு தமிழ்மாணவர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்ட பிரிவு கேட்டுள்ளது.

சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று தினங்களும் துக்கதினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்தினங்களில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து அரச திணைக்களங்கள், வர்த்தக நிறுவனங்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளை இடைநிறுத்தி, மேற்படி இடங்களில் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு துக்கத்தை வெளிப்படுத்துவோமாக - என்று அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழினத்தின் விடிவு நோக்கிய பயணத்தில் இரண்டு தசாப்தங்களின் மேலாகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வீரச்சாவை அணைத்துக் கொண்ட தமிழீழ அரசியல்துறைப் பெறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களினதும் ஐந்து வேங்கைகளின் சோகம் கலந்த நினைவில் உலகத்தமிழினமே உறைந்து போய் உள்ளது - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழரின் அரசியல் முகம் அரசினால் குரூரமாகப் பறிப்பு

### பொது அமைப்புக்கள் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.4

அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவையிட்டு மிகவும் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம் என்று பொது அமைப்புக்களின் ஒன்றிய யாழ். மாவட் டப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஏதிலிகளாகிய எங்களின் - தமிழ் மக்களின் அரசியல் முகம் பயங்கரவாதத்தின் குரூரமான இயந்திரக் கழுகின் கோர தாண்டவத்தால் பறிக்கப்பட்டுள்ளது.

அவரோடு சேர்ந்து வீரச்சாவடைந்த போராளிகளுக்கு வீரவணக்கத்தைத் தெரிவிக்கிறோம். தாயக மக்களோடு தொடங்கிய அவரது விடுதலைப் பயணம் உலகெங்கும் விரிந்தது. உலகெல்லாம் ஓடி ஓடி எங்களது நியாயங்களை எடுத்துரைத்த ராஜதந்திரி அவர். தன்னுடைய சிரிப்பாலே எல்லா மக்களையும் கவர்ந்து மக்களோடு நெருங்கியிருந்து இறுதி மூச்சு வரை போராடி வீழ்ந்தவர். எங்களுடைய அரசியற்துறை பொறுப்பாளரின் இழப்பு ஒட்டுமொத்த விடுதலையை விரும்பும் தமிழினத்துக்கு பேரிழப்பாகும். - என்றுள்ளது.

**பத்மினி சிதம்பரநாதன்**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரசாங்கம் மிக அண்மையில் கூட சமாதானப் பேச்சுவார்தைக்குத் தயார் எனக்கூறிக்கொண்டு யுத்த நிறுத்தம் இருக்கும் போதே சமாதானக் கதிரைக்கு குண்டு போட்டுள்ளது. இவ்வாறு தான் சிங்களப் பேரினவாதத்தின் திட்டங்கள் இருந்து வருகின்றன. தமிழரை யார் வழிநடத்துகின்றனரோ அவர்களைத் திட்டமிட்டு அழிப்பதே அவர்களின் தொடர்ச்சியான நடவடிக்கையாகும்

அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களின் அணுகுமுறை மக்களை அரவணைத்து மக்கள் பங்குபற்றலை ஊக்குவிக்கும் ஒரு முறையாக இருந்தது. புன்முறுவலுடன் கூடிய இவரின் இனிமையான பேச்சு மக்களின் மனங்களை வென்றது.

ஜனநாயகம் என்று பேசும் சர்வதேச சமூகம், அதற்குரிய ஒருவரையே சிங்களப் பேரிணவாதம் குண்டு வீசி அழித்துள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் உண்மையில் சிங்கள அரசு சமாதானத்துக்குரியவர் அல்லர் என்பதை உலகத்துக்கு காட்டியுள்ளது- என உள்ளது. (அ)

## யாழ்.சட்டத்தரணிகள் பிரச்சினை: பிரதம நீதியரசருக்கு அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பிரதம நீதியரசருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் யாழ். நீதிவான், யாழ். நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

சட்டத்தரணிகளின் கார் தரிப்பிடம், கலந்தாலோசனை மண்டபம் ஆகியன தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை பிரதம நீதியரசருக்கு தாம் அனுப்பி உள்ளதாகவும் பிரதம நீதியரசரின் பணிப்புரையின் கீழ் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதிவான் அங்கு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ். நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் க.கேசவன், மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் மு.சபாநாதன், பருத்தித்துறை நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பொ.குமாரசாமி, சாவக்ச்சேரி நீதிமன்ற சட்டத்தரணிகளின் சங்கத் தலைவர் கே.வேலாயுதம் ஆகியோர் உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.(அ-1)

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 19 | திங்கட்கிழமை 05.11.2007 |
| திதி : ஏகாதசி | முன்னிரவு: 09.40 |
| நட்சத்திரம் : | பூரம் பிற்பகல் : 02.05 |
| சுபநேரம் | : 12.04 - 01.34 |
| ராகுகாலம் | : 07.34 - 09.04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் கடலில் வெள்ளியிரவு 97 தமிழக மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம்,நவ.4

காங்கேசன்துறை கடற்பகுதிக்குள் ஊடுருவியதாக் கூறி 97 தமிழக மீனவர்கள் வெள்ளிக்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மிழகத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் 17 வள்ளங்களில் இலங்கைக் கடற் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் வசம் இருந்த மீன் வகைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன என்று அறியவந்தது.

சம்பந்தப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலீஸா அவர்களை விசாரணை செய்து வாக்குமூலங்களைப் பெற்றனர்.

தமிழக மீனவர்கள் 97 பேரும் நேற்று மாலை மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## புதுக்குடியிருப்பில் நேற்று விமானத் தாக்குதல்!

கொழும்பு,நவ.4

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தின என்று ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக்கிடங்கு இத்தாக்குதலில் அழிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## போர் நிலைமைகளின்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10ஆண்டுகளுக்கு மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் அமைதிப் பேச்சுக்களில் முக்கிய பங்கு வகித்தவர் சு.ப.தமிழ்ச்செல்வன் என்று கூறினார்.(அ-1)

## நாவற்குழி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாவற்குழி ரயில் நிலையப் பகுதியுடன் கூடிய வீடமைப்புத் திட்டம் என்பன மகிந்த புரம் என பெயர் மாற்றப்படும். இரண்டும் அருகருகே இருப்பதே இதற்கு காரணம். படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் உள்ள வீதிகள், கிராமங்கள் என்பவற்றின் பெயர்கள் மாற்றப்படுகின்றமை குறித்து அரசாங்கத்தின் மீது குற்றம் சாட் டப்பட்டு வருகின்றது.

பூர்த்திசெய்யப்படாமல் தடைப்பட் டுள்ள நாவற்குழி வீடமைப்புத் திட்டத் துக்கு 'மகிந்தபுரம்' என பெயரிடுவது அரச தலைவரான ஜனாதிபதிக்கு வழங்கப்படும் கௌரவமாக கருத முடியாது என்றுள்ளது. (அ-5)

# கிளாலியில் நேற்று மோதல்

கொழும்பு,நவ.4

கிளாலி முன்னரங்கப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணிக்கு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்துய நிலையம் அறிவித்தது.

முன்னரங்க பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை இராணுவத்தினர் முறியடித்துள்ளனர். இந்த மோதலில் இரண்டு பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன. இரண்டு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர். படைத்தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை என்று ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது. (அ-5)

## அமைதிப் புறாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாபெரும் சோகநிகழ்வு எம்மக்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது.

### போற்றல் மிக்க பேச்சுவார்த்தையாளன்

தமிழ்ச்செல்வன் எமது சுதந்திர இயக்கத்தில் இணைந்த காலத்திலிருந்தே என்னோடு ஒன்றாக, நெருக்கமாக வாழ்ந்தவன். நான் அவனை ஆழமாக அறிந்து ஆழமாகவே நேசித்தேன். எனது அன்புத் தம்பியாகவே வளர்த்தேன். அவனது அழகிய சிரிப்பும் அதனுள் புதைந்த ஆயிரம் அர்த்தங்களையும் அவனுள் அடர்ந்து கிடந்த ஆற்றல்களையும் ஆளுமைகளையும் நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். இலட்சியப் போராளியாக, தலைசிறந்த தானைத் தளபதியாக, மாபெரும் அரசியல் பொறுப்பாளனாக, அனைத்துலகோடும் உறவாடிய இராஜதந்திரியாக, பேராற்றல் மிக்க பேச்சுவார்த்தையாளனாக அவனை வளர்த்தெடுத்தேன்.

### ஓர் இலட்சிய நெருப்பு அவன்

தான் நேசித்த மண் விடுதலை பெற வேண்டும். தான் நேசித்த மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்று சதா சிந்தித்தான். தான் நேசித்த அந்த மக்களது விடுதலைக்காக, விடிவிற்காக தன்னையே ஊனாக உருக்கி உறுதியாக உழைத்த ஓர் இலட்சிய நெருப்பு அவன்.

நீண்டநெருப்பு நதியாக நகரும் எமது விடுதலை வரலாற்றில் அவன் ஒரு புதிய நெருப்பாக இணைந்திருக்கிறான். இந்த இணைவிலே எமது கனத்த இதயங்களில் ஒரு பெரும் இலட்சிய நெருப்பை மூட்டியிருக்கிறான். எமது இலட்சிய உறுதிக்கு உர மேற்றியிருக்கிறான். இந்த உறுதியில் உரம் பெற்று நாம் எமது இலட்சியப் பாதையில் தொடர்ந்தும் உறுதியோடு பயணிப்போம். - என்றுள்ளது. (அ)

## அரசாங்கத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள் மறக்கமுடியாத நாள். எமது போராளிகள் மீது விமானப்படை தாக்குதல் நடத்திய நாள்.

மாவீரர்களின் இழப்பால் தமிழீழ தேசமே துயரத்தில் ஆழ்ந்துள்ளது. புலம் பெயர்ந்த மக்களும் தமிழக மக்களும் துயரில் ஆழ்ந்துள்ளனர்.

மாவீரர்களின் இழப்பால் விடுதலையை வென்று எடுப்பதற்கான எழுச்சியை எமது தேசம் கொண்டிருக்கின்றது. அந்த மாவீரர்களின் இழப்பால் எல்லோருடைய இதயங் களிலும் எமது தேசம் விரைவில் மீட்கப்பட வேண்டும் என்ற அவ ஆட்கொண்டிருப்பதை உணரமுடிகிறது.

சிறிலங்கா அரசின் பாயங்கரவாதத்தை சர்வதேச சமூகம் விரைவில் புரிந்து கொண்டு, எமது சுதந்திரப் போராட்டத்தை அங்கீகரித்து எமது தலைவரின் காலத்தில் தமிழீழம் விரைவில் கிடைக்கும் என்பதை ஆணித்தரமாக கூறுகிறேன் -என்றார். (அ-1)

## சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது விடுதலைப் போராட்ட கால கட்டத்தின் சிறப்பான ஒரு பகுதியை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதென்ற விடயத்திற்கே ஒதுக்கியிருந்தார். அவ்வாறான ஓர் அரசியல் தலைவர் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் விமான குண்டு வீச்சினால் கொல்லப்பட் டுள்ளார். ஏற்கனவே நடந்த ஒரு யுத்தத்தில் அவர் விழுப்புண் அடைந்ததும் அத னால் ஒரு கைத்தடியுடன் அவர் நடமாடு வதும் உலகமறிந்த விடயமாகும்.

சு.ப.தமிழ்ச்செல்வன் இலங்கை அர சாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் ஜெனீவா பேச்சுவார்த் தைகளிலும் கலந்து கொண்டு பேச்சுவார்த்தையினூடு இனப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சித்த ஒரு தலைவர். அவ்வாறான ஒரு தலைவரை இலக்கு வைத்து தாக்குவது என்பது பேச்சுவார்தையையும் சமாதான முயற்சிகளையும் தாக்குவதற்கு சமமாகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கருதுகின்றது.

### சர்வதேசத்தை ஏமாற்றும் அரசு

தமிழ்ச்செல்வனைக் கொலை செய்த தன் மூலம் இராணுவத் தீர்வில் அரசாங்கம் கொண்டுள்ள நம்பிக்கையும் 'பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார்' என்று கூறுவதெல்லாம் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற் கான அரசின் நாடகம் என்பதையும் அவர்கள் பட்டவர்த்தனமாக வெளிக்காட்டியுள்ளனர். இவ்வாறான இலங்கை அரசாங் கத்தின் யுத்த வெறியையும் கோழைத்த னமாக செயற்பாடுகளையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மிகக் கடுமையான வார்த்தைகளில் கண்டிக்கிறது.

தமிழ்ச்செல்வனைக் கொலை செய்ததன்மூலம்தமிழ்மக்களின போராட்டத்தை அடக்கிவிடலாம் என அரசும் சிங்களத் தீவிரவாதிகளும் சிந்தித்தால் அவர்கள் தவறு விடுகிறார்கள் என்றே அர்த்தமாகும். அரசாங்கத்திற்கும் யுத்தவெறிகொண்டலையும் 'சிங்கள மார்க்ஸிட்டுகளுக்கும்' கால் மாக்ஸ் சொன்ன ஒரு விடயத்தை ஞாகப்படுத்த விரும்புகிறோம். 'ஒரு சமூகத்தில் ஒடுக்குமுறை என்பது இருக்கும் வரை ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமும் தொடரவே செய்யும்' என்பதுதான் அவரது கோட்பாடு. எனவே தமிழ்ச்செல்வனின் கொலை என்பது தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு அரசு போட்ட உரம் என்றே தமிழ் மக்கள் எடுத்துக் கொள்வார்கள்.

### முழுத் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட இழப்பு

தமிழ்ச்செல்வனுடைய இழப்பானது தலைவர் பிரபாகரனுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட இழப்பு மாத்திரமல்ல. முழுத் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட இழப்பாகும். ஆனால் இந்த இழப் பால் தமிழ் சமுதாயம் துவண்டு பின் வாங்கிவிடப்போதில்லை. தமிழ் மக்களின் இலட்சியக் கனவுகள் நிறைவேறும்வரை இன்னும் வீரியத்துடன் மக்களின் போராட்டம் தொடரும்.

இறுதியாக சிங்கள அரசாங்கம் இலக்கு வைத்து அழித்தது வெறும் தமிழ்செல்வனை மாத்திரம் அல்ல அது சமாதான முன்னெடுப்புக்களையும் பேச்சுவார்தைகளையும் இலக்குவைத்து அழித்துள்ளது என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுடன் இதன் விளைவுக ளாக எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அழிவு களுக்கும் இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நடந்த பல சுற்றுப் பேச்சுக்களை நாங்கள் நினைவு கூர்வதுடன் தமிழ் மக்களின் விடுதலைக்கு அவர் செலுத்திய உச்சபட்ச தியாகத்திற்கு நாம் சிரம் தாழ்த்தி எமது வீரவணக்கத்தை செலுத்திக்கொள்கின்றோம். தமிழ் மக் களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்ச்செல்வனின் குடும்பத்தினருக்கும் ஏற்பட் டுள்ள துயரத்தில் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பினராகிய நாமும் பங்குபெறுகின்றோம் - என்றுள்ளது. (அ-1)

## மரண அறிவித்தல்

### கந்தையா கனகசபாபதி

(முன்னாள் கிளை முகாமையாளர் ,தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம்)

கைதடி-நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் மறவன்புலோவை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது கைதடி தெற்கில் வசித்து வந்தவருமான கந்தையா கனகசபாபதி நேற்று (03.11.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - குச்சுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, தியாகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் மதுரநாயகத்தின் மைத்துனருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (04.11.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கைதடி ஊத்தல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

| நிரந்தர முகவரி | தற்காலிக முகவரி:- | தகவல் |
|---|---|---|
| மறவன்புலோ, | கைதடி தெற்கு, | ந.ஏரம்பமூர்த்தி, |
| சாவகச்சேரி. | கைதடி. | தி.சிவநேசன் |


துரித தபால்கள் பொதிகள் சேவை
தீபாவளியை முன்னிட்டு மீண்டும்
எமது வாடிக்கையாளர்களுக்கு
10% - 20% வரையான விசேட விலைக் கழிவு
FedEx Express
லண்டனுக்கு அனுப்பப்படும்
5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த
கட்டணத்தில் விசேட சலுகை
1Kg.900/=
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

BARGAINING
Sales Offer
நியாய விலையைக்கேளுங்கள் பொருளைச் சொந்தமாக்கிக்கொள்ளுங்கள்
OFFER Computers Spares
காற்றுள்ள போது தூற்றிக்கொள்ளுங்கள்
REAL CLEARING OFFER
Our BID, Your ASK
Available Stock Only
Power Tree UPS
ATX/LGA Power Supply
HP Deskjet Printers
HP All in one Printers
(Printer, Photocopy & Scanner)
HP LaserJet Printers,
Canon LaserShot Printers
Canon Lide 25 Scanner
Genius Laptop Scanner
Wireless pointers
Games Devices
Wifi adapters
Mouse pen
Internet phone
DVD Multiplayer
All type of mother boards, Processors, Hard disks, Memories, VGA Cards, Sound Cards, Network items and etc includes in this OFFER
UNIT மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737

Physics
பௌதிகவியல்
ஆரம்பம்:- 05.11.2007
Mon. - 6.30am
Mon,Wed-6.30 -7.30
By K.Selvan
NAVALAR
ஆனைப்பந்தி, யாழ்.நகர்

பரீட்சை வினாத்தாள்
தரம் 01 முதல் O/L வரையான மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் பெறலாம்.
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ் - 0776510149

இரசாயனவியல் வகுப்பு
DAY CLASS
ஆரம்பம் 04.11.2007 3.30 pm
வெப்ப இரசாயனம் வினா விடை வகுப்பு
2008 A/L பங்கீட்டுக் குளகம்
2009 A/L வாயுக்கள்
தொ.பே:- 021 222 9650
N.KALA 83/19, அரசடி வீதி (தஞ்சிலேன்) யாழ்ப்பாணம்.

CATWAS.COM
Computer Academy
# 26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
Tel: 021 2223805
E-Mail : catwasomi@Sltnet.lk
இதோ! ஆரம்பம்
வார நாள் மற்றும் வார இறுதி நாட்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
Ms Office
DTP
Hardware
Kids Program
விரிவுரைகள் Multimedia மூலம் நடைபெறும்.
வரையறையற்ற செய்முறைப் பயிற்சி
ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
தனிப்பட்ட வகுப்புக்களுக்கான அனுமதிகள்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org